# இலங்கையின் தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கை

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு

## I. கொள்கையின் பெயர் (Policy Name)

இலங்கை தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கை (National Maritime Transport Policy of Sri Lanka)

## 2. செயல்வலுப்பெறும் திகதி (Effective Date)

அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றவுடன் உடனடியாக நடைமுறைக்கு வரும் இக்கொள்கையானது, அதனை மாற்றீடு செய்யும் வரை அல்லது இரத்து செய்யப்படும் வரை செல்லுபடியாகும். இக்கொள்கையானது பின்வருமாறு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்:

- ஆண்டுதோறும் மற்றும் ஒவ்வொரு ஐந்து (05) வருடங்களுக்கு ஒருமுறையும் கட்டாய மதிப்பீடும் மீளாய்வும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- இலங்கை ஒரு தரப்பாக விளங்கும் சர்வதேச உடன்படிக்கைகளில் ஏதேனும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படும் இடைக்கால மீளாய்வுகள். (Interim reviews).
- தேசிய தேவைகள் காரணமாக மேற்கொள்ள வேண்டி ஏற்படும் அவசர இற்றைப்படுத்தல்கள் (உதாரணமாக: கடல்சார் பாதுகாப்பு சம்பவங்கள், துறைமுக சீர்திருத்தங்கள், ஒழுங்குமுறை மீள்கட்டமைப்புகள்).

## 3. அறிமுகம்

"கிழக்கு ஆசியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா ஆகியவற்றுக்கு இடையேயான முதன்மையான உலகளாவிய கப்பல் போக்குவரத்துப் பாதைகளை இணைத்து, இலங்கை இந்தியப் பெருங்கடலின் மூலோபாய ரீதியாக மிக முக்கியமான ஒரு மையப்புள்ளியில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் இலங்கைக்கு தெற்கே உள்ள கடல் வழிகளின் ஊடாக 60,000 க்கும் மேற்பட்ட கப்பல்கள் பயணிக்கின்றன. எனவே, பொருளாதார மேம்பாடு, தேசிய பாதுகாப்பு மற்றும் உலகளாவிய தொடர்புகள் ஆகியவற்றிற்காக கடல்சார் வர்த்தகம், ஏற்பாட்டியல் சேவைகளை வழங்குதல் (Logistics) மற்றும் கடல் வளங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இலங்கை தனித்துவமான முறையில் அமைந்துள்ளது .

இந்த மூலோபாயச் சாதகம் இருந்தபோதிலும், வரலாறு நெடுகிலும் கடல்சார் துறையானது சிதறிய கொள்கைகள், பிளவுபட்ட நிறுவன அதிகாரங்கள் மற்றும் குறிப்பிட்ட துறைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட உத்திகள் மூலமே

நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. இந்தத் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக, தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கையானது தற்போதுள்ள கட்டமைப்புகளை ஒருங்கிணைப்பதுடன், பின்வரும் விடயங்களையும் கொண்டுள்ளது:

- முன்னர் காணப்பட்ட தேசிய கடல்சார் மூலோபாயங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்.
- தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கை (NMP) வரைவுகளின் முழுமையான விடய பரப்பு
- இலங்கை புதிய கடல்சார் அதிகாரசபையின் (MASL) கீழ் உருவாகும் நிறுவன அதிகாரங்கள்.
- சர்வதேச கடல்சார் கடப்பாடுகள் (IMO, ILO, UN, UNCTAD, UNEP, IALA, IHO போன்றவை).
- அடுத்த தசாப்தத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட கடல்சார் மேம்பாட்டின் அவசியம்.

எனவே, இக்கொள்கையானது இலங்கையின் ஒரே, உத்தியோகபூர்வ மற்றும் எதிர்காலத்திற்குப் பொருத்தமான தேசிய கடல்சார் சட்டகமாக செயற்படுகிறது."

## I. பின்னணி

இலங்கையின் பொருளாதாரத்தில் கடல்சார் துறை ஒரு முக்கிய பங்கினை வகிப்பதுடன், சர்வதேச வர்த்தகம் மற்றும் வணிகத்திற்கான ஒரு முக்கிய நுழைவாயிலாகவும் செயல்படுகிறது. சமீபத்திய ஆண்டுகளில், இலங்கை தனது மூலோபாய புவியியல் அமைவிடத்தை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதற்கும், பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதற்கும் தனது கடல்சார் சேவைகளை (Logistics) மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது. ஒரு தனித்துவமான "தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கை" இல்லாதபோதிலும், துறைமுக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், வர்த்தக செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், கடல்சார் செயல்பாடுகளின் செயற்திறன் மற்றும் நிலையான தன்மையை உறுதி செய்வதற்கும் இலங்கை பல்வேறு முயற்சிகளையும் உத்திகளையும் செயல்படுத்தியுள்ளது. இந்த அறிமுகமானது, கடல்சார் சேவைகள் வழங்கல் துறையில் இலங்கை மேற்கொண்டு வரும் முயற்சிகள் மற்றும் பிராந்திய கடல்சார் மையமாக தனது நிலையை வலுப்படுத்துவதற்காக எடுத்துள்ள பல்வேறு கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு வழிவகுக்கின்றது.

## II. தேவைப்பாடு

இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் மூலோபாய அமைவிடம், சர்வதேச வர்த்தகத்தை எளிதாக்குவதற்கும் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கும் கடல்சார் துறை கொண்டுள்ள முக்கியத்துவத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இந்த திறனை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதற்காக, இலங்கை ஒரு "தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கையை" அறிமுகப்படுத்தி வருகிறது. இக்கொள்கையின் நோக்கம் கடல்சார் உள்கட்டமைப்பு, சேவைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மேம்படுத்துவதற்கான ஒரு விரிவான மற்றும் முறையான கட்டமைப்பை வழங்குவதாகும்.

**பிரதான நோக்கங்கள்(Key Objectives)**

I. உள்கட்டமைப்பு மேம்பாடு (Infrastructure Development): அதிகரித்து வரும் வர்த்தக அளவுகள் மற்றும் பெரிய அளவிலான கப்பல்களுக்கு இடமளிக்கும் வகையில் துறைமுக வசதிகளை மேம்படுத்துதல்.

II. ஒழுங்குமுறை சட்டகம் (Regulatory Framework): கடல்சார் துறையின் ஒழுங்குமுறை எல்லை ஒருங்கிணைக்கப்பட்டு முறைப்படுத்தப்பட வேண்டும். வணிக கப்பல் செயலகத்திற்குப் (MSS) பதிலாக இலங்கை கடல்சார் அதிகாரசபையை (MASL) நிறுவுவதன் மூலம் நீண்டகாலமாக நிலவி வந்த நிர்வாகப் பிளவுகளுக்கு தீர்வுகாண முடியும் என்பதுடன், கடல்சார் பாதுகாப்பு, அச்சுறுத்தலின்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக தெளிவான விதிமுறைகளும் நிறுவப்படும்.

III. பன்முக போக்குவரத்து தொடர்புகள் (Multimodal Connectivity): ஒட்டுமொத்த ஏற்பாட்டுப் பணிகளின் (Logistics) செயல்திறனை மேம்படுத்துவதற்காக கடல்சார் போக்குவரத்தை ஏனைய போக்குவரத்து முறைகளுடன் ஒருங்கிணைத்தல்.

IV. வர்த்தக வசதியாக்கம் (Trade Facilitation): செலவு மற்றும் போக்குவரத்து நேரத்தைக் குறைப்பதற்காக சுங்க நடைமுறைகள் மற்றும் ஆவணப்படுத்தல்களை எளிமைப்படுத்துதல்.

V. கடல்சார் மனித வளங்கள் (Marine Human Resources): கடல்சார் மனித வளங்களைத் திட்டமிடுதல், மேம்படுத்துதல், தரப்படுத்துதல் மற்றும் தரத்தை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றிற்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பொன்றை நிறுவுதல்.

VI. திறன் மேம்பாடு (Capacity Building): இத்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தொழிற் படையை மேம்படுத்துதல் மற்றும் திறன் பயிற்சிகளில் முதலீடு செய்தல்.

VII. தொழில்நுட்பத்தை தழுவல் திறன் (Technology Adoption): செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும் அபாயங்களைக் குறைப்பதற்கும் டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் தானியங்கிமயமாக்கல் (Automation) ஆகியவற்றை உபயோகித்தல்.

VIII. சுற்றுச்சூழல் நிலைத்தன்மை (Environmental Sustainability): கடல்சார் துறையினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக சுற்றாடல் நட்பு நடைமுறைகளைச் செயல்படுத்துதல்.

IX. கடல்சார் சேவைகள் (Maritime Services): கடல்சார் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்துவதற்கும் முதலீடுகளை ஈர்ப்பதற்கும் கூடுதல்/துணைச் சேவைகளை ஊக்குவித்தல்.

X. இணக்கப்பாடு (Compliance): சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) உடன்படிக்கைகளுக்கு மற்றும் இலங்கை ஒரு பங்காளியாக உள்ள கடல்சார் தொழில்துறை தொடர்பான ஏனைய சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்குவதற்குத் தேவையான நடைமுறைகள் மற்றும் சட்டக் கட்டமைப்பை உருவாக்குதல்.

XI. கப்பல் பயண அறிக்கை முறைமை (Ship Reporting): கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பு, செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் கடல்சார் சூழலைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்காக, IMO இன் "கப்பல் வழிசெலுத்தல்" (Ships' Routing) வழிகாட்டுதலின் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணையாகச் செயல்படும் கப்பல் முகாமைத்துவ அமைப்பை (VMS) மேம்படுத்தல்.

இந்த முயற்சிகளின் ஊடாக, இலங்கை புத்தாக்கங்களை ஊக்குவிப்பதுடன், நிலையான பொருளாதார வளர்ச்சியை நோக்கி பயணித்து, பிராந்திய கடல்சார் மையமாக நிலைபெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## III. நோக்கமும் சூழலமைவும் (Purpose & Context)

முக்கியமானதொரு கடல்சார் மையப்புள்ளியாக இலங்கை அமைந்துள்ள புவியியல் இருப்பிடமானது, நாட்டின் கடல்சார் திறன்களை திறம்பட பயன்படுத்துவதற்கான ஒரு மூலோபாய அணுகுமுறையின் அவசியத்தை உணர்த்துகிறது. இப்பின்னணியில், தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கையானது இரட்டை நோக்கங்களுடன் அறிமுகப்படுத்தப்படுகிறது: அதாவது, இலங்கையின் கடல்சார் வளங்களை உச்சகட்டமாகப் பயன்படுத்துதல் மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய வர்த்தகத்தில் ஒரு முக்கிய பங்குதாரராக இலங்கையின் நிலையை மேலும் வலுப்படுத்துதல் ஆகும்.

**நோக்கம் (Purpose):**

I. **கடல்சார் வளங்களை அதிகபட்ச பயனுறு திறன் பெறச்செய்தல் (Optimization of Maritime Resources):** இக்கொள்கையானது இலங்கையின் கடல்சார் உள்கட்டமைப்பு வசதிகள், கடல்சார் மனிதவளம், சேவைகள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளை நெறிப்படுத்துவதையும் நவீனமயமாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் கடல்சார் ஏற்பாட்டியல் (Logistics) துறை முழுவதிலும் வினைத்திறன், நம்பகத்தன்மை மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

II. **வர்த்தக போட்டித்திறனை அதிகரித்தல் (Enhancement of Trade Competitiveness):** கடல்சார் வர்த்தகத்திற்கு சாதகமான சூழலை உருவாக்குவதன் மூலம், உலகளாவிய சந்தையில் இலங்கையின் போட்டித்திறனை அதிகரிப்பதற்கு இக்கொள்கை முயற்சிக்கின்றது. இணைப்புகளை (Connectivity) மேம்படுத்துதல், வர்த்தக தடைகளைக் குறைத்தல் மற்றும் மிகவும் சுமூகமான விநியோகச் சங்கிலி செயல்பாடுகளுக்கு வசதியளித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

**சூழலமைவு (Context):**

I. **மூலோபாய புவிசார் அரசியல் இருப்பிடம் (Strategic Geopolitical Position):** பிரதான சர்வதேச கப்பல் போக்குவரத்துப் பாதைகளின் மையப்புள்ளியில் அமைந்துள்ளதால், இலங்கையின் கடல்சார் முக்கியத்துவமானது அதன் எல்லைகளுக்கு அப்பாலும் விரிந்து காணப்படுகிறது. இந்த மூலோபாயச் சாதகத்திலிருந்து உச்சகட்டப் பலனைப் பெறுவதற்கும், பிராந்திய மற்றும் உலகளாவிய கடல்சார் வர்த்தகத்தில் ஒரு முக்கிய பங்குதாரராக நாட்டை நிலைநிறுத்துவதற்கும் இக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

II. **பொருளாதாரத் தேவைகள் (Economic Imperatives):** கடல்சார் வர்த்தகமானது இலங்கை பொருளாதாரத்தின் மிக முக்கிய தூணாக விளங்குவதால், கடல்சார் விநியோகச் சங்கிலி உள்கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் கடுமையான தேவை நிலவுகிறது. அத்தேவைகளுக்குத் தீர்வுகாண்பதற்கும், கடல்சார் துறையின் முழுமையான பொருளாதாரத் திறனை வெளிக்கொணர்வதற்கும் இக்கொள்கை திட்டமிடப்பட்டுள்ளது.

III. **உலகளாவிய செல்நெறிகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் (Global Trends and Best Practices):** ஒன்றுக்கொன்று அதிகரித்து வரும் பரஸ்பர மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த இன்றைய உலகில், இக்கொள்கையானது உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மற்றும் கடல்சார் விநியோகச் சங்கிலித் துறையில் வளர்ந்து வரும் புதிய செல்நெறிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. உலகளாவிய மட்டத்தில் அதன் பொருத்தப்பாட்டையும் போட்டித்திறனையும் உறுதி செய்வதற்காக, இலங்கையின் மூலோபாயங்களைச் சர்வதேச தரத்திற்கு இணங்கச் செய்வதற்கு இது முயற்சிக்கிறது.

தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கையின் நோக்கம் மற்றும் பின்னணியை விளக்குவதன் மூலம், மிகவும் வினைத்திறனான, நிலையான மற்றும் உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்பை நோக்கிய, ஒரு மாற்றத்துடன் கூடிய பயணத்தைத் தொடங்குவதற்கு இலங்கை எதிர்பார்க்கின்றது.

## IV. அடிப்படைக் காரணம் (Rationale)

இலங்கையின் தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்காக, உள்நாட்டுத் தேவைகளையும் வெளிவாரி வாய்ப்புகளையும் பிரதிபலிக்கும் பல வலுவான காரணங்கள் துணையாக அமைந்துள்ளன:

I. **பொருளாதார வளர்ச்சி (Economic Growth):** இலங்கையின் பொருளாதாரம் கடல்சார் வர்த்தகத்துடன் மிகவும் சிக்கலான முறையில் பிணைந்துள்ளதுடன், துறைமுகங்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான அத்தியாவசிய நுழைவாயில்களாகச் செயல்படுகின்றன. கடல்சார் ஏற்பாட்டியல் சேவைகளை (Logistics) மேம்படுத்துவதன் மூலம் மிகவும் சுமூகமான வர்த்தக ஓட்டத்தை உருவாக்குதல், முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது இக்கொள்கையின் நோக்கமாகும்.

II. **கடல்சார் மனிதவளம் (Marine Human Resources):** இலங்கையின் கடல்சார் தொழில்துறையின் முன்னேற்றத்திற்கு, கடல்சார் மனிதவளமானது மிகவும் மதிப்புமிக்க மற்றும் மூலோபாய சொத்தாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கை மாலுமிகள் பல வருடங்களாக சர்வதேச கடல்சார் வர்த்தகம், உலகளாவிய பொருளாதாரம் மற்றும் பொதுவான சமூகத்தில் ஒரு முக்கிய பங்காற்றி வந்துள்ளனர். கடல்சார் மனிதவள

முகாமைத்துவம் என்பது கல்வி, பயிற்சி, வேலைவாய்ப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி போன்ற பல்வேறு துறைகளைக் கையாளும் ஒரு பன்முக அணுகுமுறையாகும்.

III. **போட்டித்திறன் மிக்க சாதகம் (Competitive Advantage):** அதிகரித்து வரும் போட்டித்தன்மைமிக்க உலகளாவிய சந்தையில், பிரதான கப்பல் போக்குவரத்துப் பாதைகளுக்கு அருகில் அமைந்துள்ள தனது மூலோபாய இருப்பிடத்தை உச்சகட்டமாகப் பயன்படுத்துவதற்கு இலங்கை முயற்சிக்கிறது. துறைமுக உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், விநியோகச் சங்கிலிச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் கப்பல் நிறுவனங்களுக்கும் வர்த்தகர்களுக்கும் வினைத்திறனான சேவைகளை வழங்குவதன் மூலம் நாட்டின் போட்டித்திறன் மிக்க சாதகத்தை அதிகரிப்பது இக்கொள்கையின் நோக்கமாகும்.

IV. **உள்கட்டமைப்பு நவீனமயமாக்கல் (Infrastructure Modernization):** பெரிய அளவிலான கப்பல்களுக்கு இடமளிப்பதற்கும், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சரக்கு அளவுகளைக் கையாளுவதற்கும், தொழில்துறையின் வளர்ந்து வரும் தரநிலைகளுக்கு இணங்குவதற்கும் இலங்கையின் கடல்சார் உள்கட்டமைப்பை நவீனமயமாக்குவது அவசியமாகிறது. செயல்பாட்டு வினைத்திறன் மற்றும் கொள்ளளவை அதிகரிப்பதற்காக துறைமுக வசதிகள், முனையங்கள் (Terminals) மற்றும் துணை உள்கட்டமைப்புகளுக்கான முதலீடுகளுக்கு இக்கொள்கை முன்னுரிமை அளிக்கிறது.

V. **வர்த்தக வசதியளிப்பு (Trade Facilitation):** சிக்கலான சுங்க நடைமுறைகள், அதிகாரத்துவத் தடைகள் மற்றும் திறமையற்ற ஏற்பாட்டியல் செயல்பாடுகள் பல நேரங்களில் வர்த்தகப் போட்டித்திறனுக்குத் தடையாக அமைகின்றன. சரக்கு போக்குவரத்தை மிகவும் சுமூகமாக்குவதற்கும் பரிவர்த்தனைச் செலவுகளைக் குறைப்பதற்கும் வர்த்தக நடைமுறைகளை நெறிப்படுத்துதல், நிர்வாகச் சுமைகளைக் குறைத்தல் மற்றும் விநியோகச் சங்கிலியின் வினைத்திறனை அதிகரிப்பது இக்கொள்கையின் நோக்கமாகும்.

VI. **பிராந்திய ஒருங்கிணைப்பு (Regional Integration):** இலங்கையின் மூலோபாய இருப்பிடமானது, அதனைத் தெற்காசியாவின் ஒரு நுழைவாயிலாகவும், பிராந்திய வர்த்தகம் மற்றும் இணைப்புகளுக்கான ஒரு சாத்தியமான மையமாகவும் நிலைநிறுத்துகிறது. கடல்சார் இணைப்புகளை மேம்படுத்துதல், வர்த்தக உறவுகளை ஊக்குவித்தல் மற்றும் துறைமுக மேம்பாட்டு முன்முயற்சிகள் தொடர்பாக அண்டை

நாடுகளுடன் ஒத்துழைத்துச் செயல்படுவதன் மூலம் பிராந்திய ஒருங்கிணைப்பை அதிகரிப்பதற்கு இக்கொள்கை முயற்சிக்கிறது.

VII. **நிலைத்தன்மை மற்றும் மீளெழுச்சி திறன் (Sustainability and Resilience):** காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் இயற்கை பேரழிவுகள் ஆகியவை கடல்சார் செயல்பாடுகளுக்கும் உள்கட்டமைப்புகளுக்கும் குறிப்பிடத்தக்க அபாயங்களை ஏற்படுத்துகின்றன. சுற்றுச்சூழல் நட்பு நடைமுறைகள், பேரிடர் தயார்நிலை மற்றும் உள்கட்டமைப்புகளின் மீளெழுச்சிஅ திறன் மேம்படுத்துதல் உள்ளிட்ட இந்த அபாயங்களைக் குறைப்பதற்காக நிலையான மற்றும் மீளெழுச்சிமிக்க (Resilient) நடவடிக்கைகள் குறித்து இக்கொள்கை வலியுறுத்துகிறது.

VIII. **தொழில்நுட்பத் தழுவல் (Technology Adoption):** டிஜிட்டல்மயமாக்கல், தானியங்கிமயமாக்கல் மற்றும் தரவுப் பகுப்பாய்வு (Data Analytics) ஆகிய துறைகளின் அதிவேக வளர்ச்சியானது, கடல்சார் தொழில்துறைக்கு ஒரு மாற்றத்தை நோக்கிய வாய்ப்புகளை வழங்குகிறது. துறைமுக செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும், விநியோகச் சங்கிலியின் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கும் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை இக்கொள்கை ஊக்குவிக்கிறது.

IX. **கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் ஆளுகை (Policy Coordination and Governance):** பிளவுபட்ட ஒழுங்குமுறை கட்டமைப்புகளும் நிறுவன ரீதியான திறமையின்மைகளும் பல நேரங்களில் கடல்சார் துறையின் கொள்கைச் செயலாக்கத்திற்கும் ஒருங்கிணைப்பிற்கும் தடையாக அமைகின்றன. திறம்பட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்காக நிர்வாகக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மற்றும் தெளிவான பொறுப்புக்கூறல் வழிமுறைகளை நிறுவுதல் ஆகியவற்றை இக்கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தத் தர்க்கரீதியான காரணங்களைக் கையாளுவதன் மூலம், இலங்கையின் தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கையானது நாட்டின் கடல்சார் துறையின் முழுமையான திறனை வெளிக்கொணரவும், அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும், வர்த்தகப் போட்டித்திறனை அதிகரிக்கவும் மற்றும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கிறது.

### V. தொலைநோக்கு (Vision)

“பொருளாதார தொடர்புகள் மற்றும் சுபிட்சம், சுற்றுச்சூழல் பொறுப்புக்கூறல் அத்துடன் அனைத்துப் பிரஜைகளுக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக, இலங்கையை உலகளாவிய ரீதியில் போட்டித்திறன் மிக்க, பாதுகாப்பான, அச்சுறுத்தல்களற்ற, நிலையான மற்றும் தொழில்நுட்ப ரீதியில் மேம்பட்ட இந்தியப் பெருங்கடல் கடல்சார் மையமாக நிலைநிறுத்துதல்.”

### VI. பணிக் கூற்று (Mission)

"இலங்கை கடல்சார் அதிகாரசபையினால் (MASL) வழிநடத்தப்பட்டு, தேசிய மற்றும் உலகளாவிய கூட்டுப்பங்காண்மைகளின் ஆதரவுடன் கூடிய ஒருங்கிணைந்த, வெளிப்படையான மற்றும் சர்வதேச ரீதியில் இணங்கக்கூடிய ஒழுங்குமுறை கட்டமைப்பின் ஊடாக கடல்சார் நிர்வாகத்தை வலுப்படுத்துதல், உள்கட்டமைப்பை நவீனமயமாக்குதல், மனித மூலதனத்தை மேம்படுத்துதல், பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகளின் கீழ் உள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுதல் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவித்தல்."

## 4. கொள்கைக் கோட்பாடுகள் (Policy Principles)

இலங்கையின் தேசிய கடல்சார் போக்குவரத்துக் கொள்கையானது, அதன் மூலோபாய நோக்கங்கள் மற்றும் கொள்கை ரீதியான தலையீடுகளுக்கான அடிப்படையாக அமையும் முக்கிய கோட்பாடுகளின் தொகுப்பினால் வழிநடத்தப்படுகிறது. இக் கோட்பாடுகள் மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல், வர்த்தக வசதியளிப்பு, பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தல்களற்ற நிலையை உறுதிப்படுத்துதல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவித்தல், சர்வதேச ஒத்துழைப்பை வளர்த்தல் மற்றும் கடல்சார் செயல்பாடுகளுக்கு சாதகமான ஒழுங்குமுறை கட்டமைப்பை வழங்குதல் ஆகியவற்றிற்கான நாட்டின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றன. பிரதான கொள்கை கோட்பாடுகள் பின்வருமாறு ஆகும்:

I. **நிலையான அபிவிருத்தி (Sustainable Development):** பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கு இடையே சமநிலையைப் பேணி, தனது கடல்சார் துறையில் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது. நீண்டகால நிலைத்தன்மைக்கு ஆதரவளிக்கும், சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைக்கும் மற்றும் கடல்சார் சுற்றுச்சூழல்

அமைப்புகளின் மீளெழுச்சித் திறனை அதிகரிக்கும் முதலீடுகளுக்கும் முன்முயற்சிகளுக்கும் இக்கொள்கை முன்னுரிமை அளிக்கிறது.

II. **வர்த்தக வசதியளிப்பு (Trade Facilitation):** வர்த்தக நடைமுறைகளை நெறிப்படுத்துதல், அதிகாரத்துவத் தடைகளைக் குறைத்தல் மற்றும் கடல்சார் ஏற்பாட்டியல் சேவைகளின் (Logistics) வினைத்திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு, இலங்கை தனது கடல்சார் போக்குவரத்துக் கொள்கையில் வர்த்தக வசதியளிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. சரக்குகள் மற்றும் சேவைகளின் மிகவும் சுமூகமான நடமாட்டத்திற்கு வசதியளிப்பதற்காக துறைமுக செயல்பாடுகளை மேம்படுத்துதல், சுங்க நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் தொடர்புத் திறனை (Connectivity) அதிகரிப்பதில் இக்கொள்கை கவனம் செலுத்துகிறது.

III. **பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தல்களற்ற நிலை (Safety and Security):** கடற்கொள்ளை, பயங்கரவாதம் மற்றும் கடல்சார் விபத்துக்கள் போன்ற அச்சுறுத்தல்களிலிருந்து கடல்சார் செயல்பாடுகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, இலங்கை தனது கடல்சார் போக்குவரத்துக் கொள்கையில் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல்களற்ற நிலைக்கும் முன்னுரிமை அளிக்கிறது. கடல்சார் செயல்பாடுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகள், கடல்சார் பாதுகாப்புத் திறன்களை அதிகரித்தல், ஒழுங்குமுறை கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் ஒத்துழைப்பை ஊக்குவித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

IV. **சுற்றுச்சூழல் நிலைத்தன்மை (Environmental Sustainability):** சுற்றுச்சூழல் நிலைத்தன்மை என்பது இலங்கையின் கடல்சார் போக்குவரத்துக் கொள்கையின் ஒரு முக்கிய தூணாகும். சுற்றுச்சூழல் நட்பு ரீதியான கப்பல் போக்குவரத்து நடைமுறைகளை ஊக்குவிக்கவும், உமிழ்வுகளைக் (Emissions) குறைக்கவும், துறைமுகங்கள் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுபாட்டைக் குறைக்கவும் இக்கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. கடல்சார் செயல்பாடுகளினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக பசுமைத் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதற்கும், மாசுபாட்டைத் தடுக்கும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் கடல்சார் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கும் இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது.

V. **சர்வதேச ஒத்துழைப்பு (International Collaboration):** அண்டை நாடுகள், பிராந்திய அமைப்புகள் மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடனான கூட்டாண்மையின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டு, இலங்கை தனது கடல்சார் போக்குவரத்துக் கொள்கையில் சர்வதேச ஒத்துழைப்பை மதிக்கின்றது. பொதுவான கடல்சார் சவால்களுக்குத் தீர்வுகாண்பதற்கும், கடல்சார் தொடர்புத் திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் பரஸ்பர சுபிட்சத்தை ஊக்குவிப்பதற்கும் இக்கொள்கையானது உரையாடல்கள், தகவல் பரிமாற்றம் மற்றும் கூட்டு முன்முயற்சிகளை ஊக்குவிக்கிறது.

VI. **ஒழுங்குமுறை சட்டகம் (Regulatory Framework):** நல்லாட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் சட்டபூர்வமான நிச்சயம் போன்ற கோட்பாடுகளால் வழிநடத்தப்படும், கடல்சார் செயல்பாடுகளுக்கு வெளிப்படையான, எதிர்வுகூற முடியுமான மற்றும் சாதகமான ஒழுங்குமுறை கட்டமைப்பை இலங்கை பேணுகிறது. கடல்சார் செயல்பாடுகளை ஒழுங்கான முறையில் நடத்துவதை உறுதி செய்வதற்கும், பங்குதாரர்களுக்கு சம வாய்ப்புகளைக் கொண்ட ஒரு சூழலை (Level playing field) உருவாக்குவதற்கும் தெளிவான விதிமுறைகள், தரநிலைகள் மற்றும் இணக்கத் தேவைகளை நிறுவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

VII. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (Inclusive Growth): கடல்சார் செயல்பாடுகளின் பலன்கள் சமூகம் முழுவதும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிசெய்து, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக-பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கு இலங்கையின் கடல்சார் போக்குவரத்துக் கொள்கை அர்ப்பணிப்புடன் உள்ளது. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் அனைவருக்கும் பயனளிக்கும் சுபிட்சத்தை ஏற்படுத்துவதற்காக மனித மூலதனம், திறன் மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்பு முதலீடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதை இக்கொள்கை எதிர்பார்க்கிறது.

இக்கொள்கை வடிவங்கள் கடல்சார் மேம்பாடு குறித்த இலங்கையின் மூலோபாய அணுகுமுறைக்கு வழிகாட்டுவதுடன், கடல்சார் துறையில் அதன் முன்னுரிமைகள், செயல்பாடுகள் மற்றும் தலையீடுகளை வடிவமைக்கின்றன. இக்கொள்கைகளை நிலைநிறுத்துவதன் மூலம், நிலையான வளர்ச்சி மற்றும் சுபிட்சத்திற்காக தனது கடல்சார் துறையின் முழுமையான திறனைப் பயன்படுத்துவதை இலங்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

5. **கொள்கை கூற்று (Policy Statements)**

I. **பொருளாதார மேம்பாடு (Economic Development):** பொருளாதார மேம்பாடு மற்றும் சுபிட்சத்தை அடைவதற்காக தனது கடல்சார் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் கடல்சார் துறையின் பங்களிப்பை உச்சகட்டமாக்குவதற்காக முதலீடுகளை ஈர்த்தல், வர்த்தகத்தை ஊக்குவித்தல் மற்றும் எமது கடல்சார் துறையின் போட்டித்திறனை அதிகரிப்பது ஆகியவற்றில் எமது கொள்கைகள் கவனம் செலுத்தும்.

II. **வர்த்தக வசதியளிப்பு (Trade Facilitation):** பொருளாதார வளர்ச்சி மற்றும் போட்டித்திறனை ஊக்குவிப்பதில் வினைத்திறனான வர்த்தக வசதியளிப்பின் முக்கியத்துவத்தை நாம் அங்கீகரிக்கிறோம். எமது துறைமுகங்கள் ஊடாக சரக்குகள் மற்றும் சேவைகளின் மிகவும் சுமூகமான நடமாட்டத்திற்கு வசதியளிப்பதற்காக சுங்க நடைமுறைகளை நெறிப்படுத்துதல், பரிசோதனை தங்குநேரங்களைக் (Clearance times) குறைத்தல் மற்றும் தொடர்பு திறனை (Connectivity) மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு எமது கொள்கைகள் முன்னுரிமை அளிக்கும்.

III. **உள்கட்டமைப்பு மேம்பாடு (Infrastructure Development):** வளர்ந்து வரும் வர்த்தக அளவுகளுக்கு இடமளிப்பதற்கும், பிராந்திய மற்றும் உலகளாவிய சந்தைகளுடனான தற்போதைய இணைப்புகளை அதிகரிப்பதற்கும் தனது துறைமுக உள்கட்டமைப்பை நவீனமயமாக்கவும் விரிவாக்கவும் இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது. நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காக துறைமுக வசதிகளில் முதலீடு செய்தல், போக்குவரத்து வலையமைப்புகளை நவீனமயமாக்குதல் மற்றும் உள்நாட்டு உள்கட்டமைப்பு இணைப்புகளை (Hinterland connectivity) அதிகரிப்பது ஆகியவற்றில் எமது கொள்கைகள் கவனம் செலுத்தும்.

IV. **பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தல்களற்ற நிலை (Safety and Security):** கடல்சார் செயல்பாடுகளின் பாதுகாப்பையும் அச்சுறுத்தல்களற்ற நிலையையும் உறுதி செய்வது இலங்கையின் உயர்தர முன்னுரிமையாகும். எமது கடல்சார் தேவைகளைப்

பாதுகாப்பதற்கும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், கடல்சார் பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அமைப்புகளை அதிகரித்தல் அத்துடன் கடற்கொள்ளை, பயங்கரவாதம் மற்றும் கடல்சார் குற்றங்களுக்கு எதிராகப் போராடுவதை எமது கொள்கைகள் நோக்கமாகக் கொண்டிருக்கும்.

V. **சுற்றுச்சூழல் நிலைத்தன்மை (Environmental Sustainability):** கடல்சார் செயல்பாடுகளில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவிப்பதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது. கடல்சார் செயல்பாடுகளினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக கப்பல் போக்குவரத்தினால் ஏற்படும் உமிழ்வுகளைக் (Emissions) குறைத்தல், துறைமுகங்கள் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுபாட்டைக் குறைத்தல், கடல்சார் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாத்தல் அத்துடன் பசுமைத் தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதில் எமது கொள்கைகள் கவனம் செலுத்தும்.

VI. **சர்வதேச ஒத்துழைப்பு (International Collaboration):** பொதுவான கடல்சார் சவால்களுக்குத் தீர்வுகாண்பதிலும் பரஸ்பர சுபிட்சத்தை ஊக்குவிப்பதிலும் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை நாம் அங்கீகரிக்கிறோம். கடல்சார் இணைப்புத் திறன்களையும் ஒத்துழைப்பையும் அதிகரிப்பதற்காக அண்டை நாடுகள், பிராந்திய அமைப்புகள் மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடனான தற்போதைய கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதற்கு எமது கொள்கைகள் முன்னுரிமை அளிக்கும்.

VII. **ஒழுங்குமுறை சட்டகம் மற்றும் ஆளுகை (Regulatory Framework and Governance):** கடல்சார் செயல்பாடுகளுக்காக வெளிப்படையான, கணிக்கக்கூடிய மற்றும் சாதகமான ஒழுங்குமுறை கட்டமைப்பை நிறுவுவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது. வணிகக் கப்பல் போக்குவரத்து செயலகத்திற்கு (MSS) பதிலாக தேசிய கடல்சார் நிர்வாகமாக இலங்கை கடல்சார் அதிகாரசபையை (MASL) பலப்படுத்துவது இதில் அடங்கும். கடல்சார் பங்குதாரர்களுக்கு சாதகமான வணிகச் சூழலை உருவாக்குவதற்காக சர்வதேச கடல்சார் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல், நிர்வாகம் மற்றும் நிறுவனத்

திறனை அதிகரித்தல் அத்துடன் நல்லாட்சி நடைமுறைகளை ஊக்குவிப்பதில் எமது கொள்கைகள் கவனம் செலுத்தும்.

இந்தக் கொள்கை கூற்றுகள் கடல்சார் துறையில் இலங்கையின் மூலோபாய முன்னுரிமைகளையும் அர்ப்பணிப்புகளையும் தெளிவாக எடுத்துக் காட்டுவதுடன், நிலையான வளர்ச்சி மற்றும் சுபிட்சத்திற்காக எமது கடல்சார் துறையின் முழுமையான திறனைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு வழிகாட்டுகின்றன.

## 6. கொள்கை இலக்குகள் (Policy Goals)

இலங்கையின் கடல்சார் போக்குவரத்துக் கொள்கையானது, நாட்டின் மூலோபாய முன்னுரிமைகள் மற்றும் கடல்சார் துறை சார்ந்த எதிர்பார்ப்புகளுடன் ஒத்துப்போகும் பொதுவான நோக்கங்களின் தொகுப்பை அடைவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நோக்கங்கள் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துதல், வர்த்தக தொடர்புகளை அதிகரித்தல், கொடி (Flag), கடலோர (Coastal) மற்றும் துறைமுக (Port) அரசு என்ற ரீதியில் பாதுகாப்பையும் அச்சுறுத்தல்களற்ற நிலையையும் உறுதிப்படுத்துதல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவித்தல், சர்வதேச ஒத்துழைப்பை வளர்த்தல் மற்றும் கடல்சார் செயல்பாடுகளுக்கு சாதகமான ஒழுங்குமுறை கட்டமைப்பை வழங்குதல் ஆகியவற்றிற்கான இலங்கையின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றன. பிரதான கொள்கை நோக்கங்கள் பின்வருமாறு ஆகும்:

I. **பொருளாதார வளர்ச்சி மற்றும் போட்டித்திறன் (Economic Growth and Competitiveness):** இலங்கை ஒரு கடல்சார் நாடு என்ற ரீதியில் தனது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் போட்டித்திறனை அதிகரிப்பதற்கும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (GDP) கடல்சார் துறையின் பங்களிப்பை அதிகரித்தல், துறைமுக உள்கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களுக்கான முதலீடுகளை ஈர்த்தல் அத்துடன் கடல்சார் வர்த்தகம் மற்றும் முதலீடுகளுக்கு இலங்கை ஒரு விருப்பமான இடமாக நிலைநிறுத்துவது இதில் அடங்கும்.

II. **வர்த்தக வசதியளிப்பு மற்றும் தொடர்புத் திறன் (Trade Facilitation and Connectivity):** இக்கொள்கையின் ஊடாக வர்த்தக வசதியளிப்பு மற்றும் தொடர்புத் திறனை மேம்படுத்துவதற்கு இலங்கை எதிர்பார்க்கிறது. சரக்குகள் மற்றும் சேவைகளின் மிகவும் சுமூகமான நடமாட்டத்திற்காக துறைமுக செயல்பாடுகளை மேம்படுத்துதல், சரக்கு விடுவிப்பு நேரங்களைக் குறைத்தல், போக்குவரத்து வலையமைப்புகளை

மேம்படுத்துதல் மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய சந்தைகளுடனான தற்போதைய இணைப்புகளை அதிகரிப்பது இதில் அடங்கும்.

III. **கடல்சார் மனித வளம் (Marine Human Resources):** எமது கடற்படையின் திறன்களிலிருந்து மேலும் பொருளாதாரப் பலன்களை ஈட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை இலங்கை கொண்டுள்ளது. அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் தீவிரமாகச் சேவையாற்றும் மாலுமிகளின் எண்ணிக்கையை மூன்று மடங்காக அதிகரிக்கவும், அதே காலப்பகுதியில் வருவாயை நான்கு மடங்காக அதிகரிக்கவும் இத்துறை அசைக்க முடியாத இலட்சியத் திட்டங்களைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், தற்போது இலங்கைக்கு 6,000 பிரத்யேக இடங்கள் (Dedicated slots) மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளமை இத்துறை எதிர்கொள்ளும் ஒரு முக்கிய சவாலாகும். இது இத்துறையின் தீவிர வளர்ச்சி இலக்குகளுக்கு ஒரு பெரிய தடையாகும். அதேபோல், தகுதி பெற்றதன் பின்னர் ஆரம்ப நிலை (Entry level) மாலுமிகளைப் பணியில் அமர்த்துவது சற்றே மந்தகதியில் உள்ளதுடன், இது இத்துறையில் நுழையும் புதியவர்களுக்குக் கணிசமான சவால்களை ஏற்படுத்துகிறது. எனவே, பங்குதாரர்களின் ஆதரவுடன் ஒரு பயனுள்ள வர்த்தகநாம மூலோபாயத்தை (Branding strategy) உருவாக்குவதும் உலகளாவிய ரீதியில் இலங்கையை மேம்படுத்துவதும் அவசியமானதாகும்.

இதற்கமைய, கடல்சார் மனிதவள மேம்பாட்டிற்காக இத்துறை பின்வரும் ஐந்து **(05) பிரதான தூண்களில்** கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- தரப்படுத்தல், தர உறுதிப்பாடு மற்றும் ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள்
- கடல்சார் கல்வி மற்றும் பயிற்சி
- துறை சார்ந்த வேலைவாய்ப்பு மேம்பாடு
- உலகளாவிய மேம்பாட்டு நடவடிக்கைகள்
- மாலுமிகளின் நல்வாழ்வு மற்றும் நலன்புரிச் சேவைகள்

- **தரப்படுத்தல், தர உறுதிப்பாடு மற்றும் ஒழுங்குமுறை *சீர்திருத்தங்கள்* Standardization, Quality Assurance & Regulatory Reforms**

விரிவுரைகளின் தரம், உள்கட்டமைப்பு வசதிகள், விரிவுரையாளர் குழாம், கற்றல் விளைவுகள் மற்றும் பாலின உள்ளடக்க ஏற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில், காலமுறை கணக்காய்வுகள் (Periodic audits) மற்றும் தொடர்ச்சியான

கண்காணிப்பு மூலம் கடல்சார் கல்வி மற்றும் பயிற்சி (MET) மீதான ஒழுங்குமுறை மேற்பார்வையை இலங்கை வலுப்படுத்தும்.

சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) மாதிரிப் பாடநெறிகள், ஒழுங்குமுறை புதுப்பித்தல்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப பாடத்திட்டங்களும் மதிப்பீடுகளும் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும்.

கப்பல்களுக்குள் வினைத்திறனான தகவல் பரிமாற்றத்தை உறுதி செய்வதற்காக, அனைத்து CDC (Continuous Discharge Certificate) விண்ணப்பதாரர்களுக்கும் கட்டாய ஆங்கில மொழி தேர்ச்சிப் பரீட்சை நடைமுறைப்படுத்தப்படும்.

இலங்கை கடல்சார் அதிகாரசபை, குடிவரவு குடியகல்வு திணைக்களம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், துறைமுகங்கள் மற்றும் மாலுமிகள் ஆட்சேர்ப்பு மற்றும் நிலைப்படுத்தல் சேவைகள் (SRPS) ஆகியவற்றை இணைக்கும் தேசிய டிஜிட்டல் அடையாள சரிபார்ப்பு அமைப்பின் மூலம் சான்றிதழ்களின் செல்லுபடித்தன்மையை நெறிப்படுத்துதல், மோசடிகளைக் குறைத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்படும்.

சேவையை கைவிட்டுச் செல்லுதல் (Desertion), விசா விதிமீறல்கள், ஆவண மோசடிகள் மற்றும் ஒழுக்கமற்ற நடத்தைகள் ஆகியவற்றைக் கையாள்வதற்காக தெளிவான ஒழுக்காற்று நடைமுறைகள் வகுக்கப்படும்.

ETO (Electro-Technical Officer) மற்றும் COC (Certificate of Competency) தகைமை வழிகளுக்கான சீர்திருத்தங்கள் மூலம், உருவகப்படுத்துதல் (Simulation) தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தித் தேவையான கடல் சேவை காலத்தை (Sea time) குறைக்க வழிவகுப்பதுடன், கப்பல் பொறியியல் கடற்படைப் பயிற்சிப் பயிலுநர்களுக்கு (Apprentices) கட்டாய கப்பல் கட்டும் தளப் (Shipyard) பயிற்சி அல்லது பிற அங்கீகரிக்கப்பட்ட செயலமர்வு பயிற்சிகளைப் பெறுவதற்கு அனுமதியளிக்கப்படும்.

அடிப்படை திரவப் போக்குவரத்து கப்பல் பயிற்சிக்கு மாத்திரம், முந்தைய கடல் சேவை காலம் எதுவுமின்றிப் பதிவு செய்வதற்கு அனுமதிக்கும் வகையில், திரவப் போக்குவரத்து கப்பல் பயிற்சி (Tanker training) தகைமைகள் நவீனமயமாக்கப்படும்.

MET அனுமதிகளுக்குள் பாலின உணர்திறன் தேவைகள் உள்ளடக்கப்படும்; இதற்காக துன்புறுத்தல்களுக்கு எதிரான கொள்கைகள், பாதுகாப்பான முறைப்பாட்டு வழிமுறைகள்,

தொடர்ச்சியான கண்காணிப்பு, காலமுறை கணக்காய்வு மற்றும் பாலின வாரியான வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல் ஆகியவை உள்ளடக்கப்படும்.

MET நிறுவனங்களின் வளவாளர்களும், இலங்கை கடல்சார் அதிகாரசபையின் MASL மதிப்பீட்டாளர்களும் இத்துறை மற்றும் ஒழுங்குமுறைத் துறையின் தற்போதைய புதிய முன்னேற்றங்களுடன் தொடர்ச்சியாகத் தங்களைப் புதுப்பித்துக் கொள்கிறார்களா என்பது கண்காணிக்கப்படும்.

- **கடல்சார் கல்வி, பயிற்சி மற்றும் திறன்மேம்பாடு (Maritime Education, Training & Skills Development)**

STCW (Seafarers' Training, Certification and Watchkeeping)) உடன்படிக்கைக்கு இணங்க ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய பாடத்திட்டத்திற்குள் டிஜிட்டல் கருவிகள், கலப்பு (Hybrid) கற்றல் முறைகள், உருவகப்படுத்துதல் (Simulation) அடிப்படையிலான மதிப்பீடுகள், உளநல விழிப்புணர்வு மற்றும் பாலின உணர்திறன் பயிற்சி ஆகியவை உள்ளடக்கப்படும்.

NVQ (National Vocational Qualification) தகுதி பெற்ற கைவினைஞர்கள் கடல்சார் தொழில்களுக்குள் நுழைவதற்கான கட்டமைக்கப்பட்ட மாற்று வழிகள் உருவாக்கப்படும் என்பதுடன், மின்சார வல்லுநர்கள் ETO சான்றிதழைப் பெறுவதற்கும் ஆதரவளிக்கப்படும்.

உள்நாட்டு கப்பல்களுக்கான திருத்தப்பட்ட COC நடைமுறைகள் (2000 kW வரையிலான NCV தலைமை பொறியியலாளர், 3000 GRT வரையிலான மாஸ்டர் மற்றும் டக் மாஸ்டர்/மேட் உட்பட) உள்நாட்டு கடல்சார் திறனை வலுப்படுத்தப்படும்.

மேம்படுத்தப்பட்ட உருவகப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன், அனைத்து கட்டாய குறுகிய கால பாடநெறிகளையும் சர்வதேச தரத்திற்கு ஏற்ப நடத்துவதற்காக அரசாங்கத்தின் பயிற்சி நிலையங்கள் நவீனமயமாக்கப்படும்.

அனைத்து MET நிறுவனங்களிலும் பெண்களின் பங்கேற்பை விரிவுபடுத்துவதற்காக சேர்க்கை இலக்குகள், உதவித்தொகைகள், விடுதி வசதிகள் மற்றும் பெண்களுக்கு பாதுகாப்பான தங்குமிடங்கள் மற்றும் சுகாதார வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

COC (FG - Foreign Going) சான்றிதழ் வைத்திருப்பவர்கள் பட்டப்படிப்பு தகைமைகளைப் பெறுவதற்கான வழிமுறை ஒன்று நிறுவப்படும்.

இலங்கை கடற்படை அதிகாரிகளின் பயிற்சி மற்றும் கடல் சேவைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அங்கீகரிப்பதன் மூலம், அவர்கள் வர்த்தக கடற்படைத் துறைக்கு (Merchant Navy) மாறுவதற்கான ஒரு முறைமை நிறுவப்படும்.

- **துறை சார்ந்த வேலைவாய்ப்பு மேம்பாடு (Segment-Wise Employment Development)**

தேசிய மாலுமிகள் திறன் நுழைவாயில் (National Seafarer Talent Portal) ஒன்றின் மூலம் சரிபார்க்கப்பட்ட சுயவிவரங்கள், டிஜிட்டல் சான்றிதழ்கள், சேவை வழங்குநர்களுக்கான அணுகல் மற்றும் வெளிநாட்டு நாணய கண்காணிப்பு வசதிகள் வழங்கப்படும் என்பதுடன், கடல்சார் துறையில் பணிபுரியும் பெண்களுக்காக பிரத்யேகப் பதிவேடு (Women in Maritime Employment Registry) ஒன்றும் வழங்கப்படும்.

இலங்கை இலக்கு வைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் தொழில் கூட்டாண்மைகள் மூலம் ஐரோப்பா மற்றும் ஆசியாவின் முக்கிய வேலைவாய்ப்பு சந்தைகளில் கவனம் செலுத்தும். உலகளாவிய தேவையை பூர்த்தி செய்வதற்காக LNG, வெளிக்கடற்பரப்பு (Offshore), சொகுசு கப்பல் (Cruise) மற்றும் ஐரோப்பிய ஒன்றிய (EU) கொடியிடப்பட்ட கப்பல்களுக்கான சிறப்புப் பயிற்சி பெற்ற தொழிற்கடையை உருவாக்கும்.

விரிவாக்கப்பட்ட சிடிசி (CDC) பிரிவுகளுக்குள், சொகுசு கப்பல்கள் (Cruise) மற்றும் வெளிக்கடற்பரப்புகளில் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்காக உணவு வழங்கல் (Catering) மற்றும் விருந்தோம்பல் (Hospitality) பாத்திரங்கள் அதிகாரப்பூர்வமாக உள்ளடக்கப்படும்.

சேவை வழங்குநர்களுக்கான ஊக்குவிப்புகள், விருந்தோம்பல், பொறியியல் மற்றும் மருத்துவ உதவியாளர் பாத்திரங்களில் பரந்த பங்கேற்பை வழங்குவதன் மூலமும், மகப்பேறு விடுப்பு அல்லது பராமரிப்பு இடைவெளிகளுக்குப் பிறகு மீண்டும் பணிக்குத் திரும்பும் பெண்களுக்கான கட்டமைக்கப்பட்ட மீள்-நுழைவுத் திட்டங்கள் மூலமும் பெண்களின் வேலைவாய்ப்பு ஊக்குவிக்கப்படும்.

- **உலகளாவிய மேம்படுத்தல் மற்றும் சர்வதேச வர்த்தகநாமமாக்கல் (Global Promotions & International Branding)**

இலங்கை தனது ஒழுக்கமான, டிஜிட்டல் முறையில் சரிபார்க்கப்பட்ட மற்றும் பாலின சமநிலை கொண்ட கடல்சார் தொழிற் படையினரை முன்னிலைப்படுத்தி உலகளாவிய ரீதியில் ஒரு வலுவான அடையாளத்தை உருவாக்கும்.

வர்த்தகநாமமாக்கல் கருப்பொருள்கள் வெளிநாட்டு நாணயப் பங்களிப்பு, உலகளாவிய போட்டித்திறன் மற்றும் உள்ளடக்கிய தன்மை (Inclusivity) ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

Maritime Liaison Officers, தூதரகங்களுக்கான மாலுமிகள் மேம்பாட்டு கருவிகள் (Seafarer Promotion Toolkits) மற்றும் வருடாந்த உலகளாவிய கடல்சார் திறன் மன்றங்கள் (Maritime Talent Forums) மூலம் இராஜதந்திர வலையமைப்புகள் வலுப்படுத்தப்படும்.

அரசாங்கங்களுக்கு இடையிலான (G2G) ஒப்பந்தங்கள் மூலம் பயிற்சிப் பழகுநர் (Cadet) பணியிடங்கள், அதிகாரி பதவிகள் மற்றும் மாலுமிகள் தரவரிசை (Rating) ஒதுக்கீடுகள் உறுதி செய்யப்படும்.

இலங்கை மாலுமிகளுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளைத் தேடுவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து ஒரு சிறப்புப் பிரிவு உருவாக்கப்படும்.

சர்வதேச பிரச்சாரத் திட்டங்களில் பெண் கடல்சார் நிபுணர்கள் முக்கியமாக முன்னிலைப்படுத்தப்படுவார்கள் என்பதுடன், அவர்களின் தெரிவுநிலையை மேம்படுத்துவதற்காக சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) 'கடல்சார் துறையில் பெண்கள் திட்டம்' (Women in Maritime Programme) மற்றும் WISTA அமைப்புடன் கூட்டாண்மைகள் ஏற்படுத்தப்படும்.

- **மாலுமிகளின் நல்வாழ்வு, நலன்புரிச் சேவைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு (Seafarer Wellbeing, Welfare & Social Protection)**

விரிவான நல்வாழ்வுத் திட்டங்களில் 24 மணி நேரமும் இயங்கும் உடனடி ஆலோசனை உதவி இலக்கம், emotional-health education in MET மற்றும் IMO/ITF வழிகாட்டுதல்களுக்கு இணங்க கப்பலில் உள்ள நல்வாழ்வு நெறிமுறைகள் ஆகியவை உள்ளடக்கப்படும்.

தேசிய தடுப்பூசி மற்றும் மருத்துவத் திட்டம் ஒன்றின் மூலம் கடல்சார் மருத்துவத் தரங்களுக்கு இணங்குதல் மற்றும் காலமுறை சுகாதார பரிசோதனைகள் உறுதி செய்யப்படும்.

Financial literacy பயிற்சி மூலம் மாலுமிகள் தங்களின் பணப்பரிமாற்றங்கள் (Remittances), சேமிப்புகள் மற்றும் முதலீடுகளை நிர்வகிக்க ஆதரவளிக்கப்படும் என்பதுடன், அதன் மூலம் குடும்பத்தின் நிதி ஸ்திரத்தன்மை உறுதி செய்யப்படும்.

தங்குமிடப் பயிற்சியில் ஈடுபடுபவர்கள் எதிர்கொள்ளும் தங்குமிடப் பற்றாக்குறைப் பிரச்சினையைத் தணிப்பதற்காக பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மூலம் சலுகை அடிப்படையிலான விடுதி வசதிகள் மேம்படுத்தப்படும்.

தரப்படுத்தப்பட்ட தேசிய பயிற்சிப் பழகுநர் (Cadet) ஆட்சேர்ப்புக் கொள்கையானது வெற்றிடங்களை நெறிப்படுத்துவதுடன் கப்பல் உரிமையாளர்களை ஊக்குவிக்கும்.

பாலின-குறிப்பிட்ட நலன்புரி நடவடிக்கைகளில் துன்புறுத்தல்களுக்கு எதிரான அமைப்புகள், பாதுகாப்பான கப்பல் முறைப்பாட்டு வழிமுறைகள், பெண்களுக்கு உகந்த அறைகள் மற்றும் சுகாதார வசதிகள், MLC 2006 இன் கீழ் மகப்பேறு பாதுகாப்புகள் அத்துடன் பெண் பணியாளர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட உளநல மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவை உள்ளடக்கப்படும்.

மாலுமிகளுக்கான கடல்சார் உழைப்பு உடன்படிக்கையின் (MLC) தேவைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துதல்; இதில் குறைந்தபட்ச வயது, மருத்துவச் சான்றிதழ்கள், ஊதியம், விடுப்பு மற்றும் தாயகம் திரும்புதல் (Repatriation) பற்றிய குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய கையெழுத்திடப்பட்ட சேவை ஒப்பந்தம், நியாயமான நிபந்தனைகள் மற்றும் கண்ணியமான வாழ்க்கை/வேலைச் சூழலுக்கான உரிமைகள் மற்றும் அவர்களின் நலன்புரிச் சேவைகள் ஆகியவை உள்ளடக்கப்படும்.

IV. ***சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல்*: (Promotion of Small & Medium Scale Enterprises):** கடல்சார் மற்றும் ஏற்பாட்டியல் (Logistics) துறையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை (SMEs) மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் ஒட்டுமொத்த தொழில்துறையின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க முடியும்.

V. **உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி (Infrastructure Development):** வளர்ந்து வரும் வர்த்தக அளவுகள், பெரிய அளவிலான கப்பல்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளுக்கு இடமளிக்கும் வகையில், இலங்கை தனது கொள்கையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கிறது. நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காக துறைமுக வசதிகளை நவீனமயமாக்குதல், துறைமுக கொள்ளளவை விரிவுபடுத்துதல், போக்குவரத்து வலையமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் உள்நாட்டு நிலப்பரப்பு இணைப்புகளை (Hinterland connectivity) வலுப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

VI. **கடல்சார் பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தலின்மை (Safety and Security):** கடல்சார் நடவடிக்கைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இலங்கை அதிக முன்னுரிமை அளிக்கிறது. நமது கடல்சார் நலன்கள் மற்றும் தேசிய பாதுகாப்பைப் பாதுகாப்பதற்காக கடல்சார் பாதுகாப்பு திறன்களை வலுப்படுத்துதல், கண்காணிப்பு அமைப்புகளை மேம்படுத்துதல், கடற்கொள்ளை, பயங்கரவாதம் மற்றும் கடல்சார் குற்றங்களுக்கு எதிராகப் போராடுதல் போன்றெ சர்வதேச பாதுகாப்புத் தரங்களுக்கு இணங்குவதை ஊக்குவித்தல் ஆகியவை இதன் கொள்கை நோக்கங்களாகும்.

VI. **சுற்றுச்சூழல் நிலைத்தன்மை (Environmental Sustainability):** சுற்றுச்சூழல் நிலைத்தன்மை என்பது இலங்கையின் கடல்சார் போக்குவரத்து கொள்கையின் முக்கிய கவனம் செலுத்தும் துறையாகும். கடல்சார் நடவடிக்கைகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்காக கப்பல் போக்குவரத்தில் இருந்து வெளியாகும் உமிழ்வைக் (Emissions) குறைத்தல், துறைமுகங்கள் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுபாட்டைக் குறைத்தல், கடல் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாத்தல் போன்றே பசுமைத் தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதை ஊக்குவித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

VIII. **சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நாடுகளுக்கிடையிலான உறவிகள் (International Collaboration and Diplomacy):** இந்தக் கொள்கையின் மூலம் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் இராஜதந்திர உறவுகளை மேம்படுத்துதைற்கு இலங்கை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொதுவான கடல்சார் சவால்களுக்கு தீர்வுகளைக் காண்பதற்கும் பரஸ்பர செழிப்பை ஊக்குவிப்பதற்கும் அண்டை நாடுகள், பிராந்திய அமைப்புகள் மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடன் தற்போதுள்ள கூட்டாண்மைகளை வலுப்படுத்துதல், உரையாடல்கள், தகவல் பரிமாற்றம் மற்றும் கூட்டு முயற்சிகளை ஊக்குவித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

IX. **ஒழுங்குமுறை சட்டகம் மற்றும் ஆளுமை (Regulatory Framework and Governance):** கடல்சார் நடவடிக்கைகளுக்காக வெளிப்படையான, கணிக்கக்கூடிய மற்றும் சாதகமான ஒழுங்குமுறை கட்டமைப்பை நிறுவ இலங்கை எதிர்பார்க்கிறது. கடல்சார் பங்குதாரர்களுக்கு சாதகமான வணிகச் சூழலை உருவாக்குவதற்காக சர்வதேச கடல்சார் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல், நிர்வாகம் மற்றும் நிறுவனத் திறனை மேம்படுத்துதல் போன்றே நல்லாட்சி நடைமுறைகளை ஊக்குவித்தல் இதன் நோக்கமாகும்.

X. **கடற் பயண அறிக்கை (Ship Reporting):** இலங்கைக்கு தெற்கே உள்ள கப்பல் போக்குவரத்தை கண்காணிக்கும் போது, அதிகப்படியான கப்பல் போக்குவரத்தும் அடர்த்தியும் இலங்கையின் காலிக்கு அப்பால் காணப்படுவது

அவதானிக்கப்பட்டுள்ளது. பாரசீக வளைகுடா, இந்தியக் கடற்கரை மற்றும் ஏடன் வளைகுடா (Gulf of Aden) ஆகியவற்றிலிருந்து வரும் ஒட்டுமொத்த போக்குவரத்தும் எட்டாவது டிகிரி கால்வாய் (Eight-degree channel) வழியாக காலிக்கு அப்பால் ஒன்றாக குவிவதே இதற்குக் காரணமாகும். கப்பல்கள் பல்வேறு திசைகளில் இருந்து வருவதாலும், காலியை அடைந்தவுடன் அவை அனைத்தும் தங்கள் பாதையை மாற்றுவதாலும், எதிரெதிர் போக்குவரத்தைப் பிரிப்பது மட்டுமல்லாமல், பொருத்தமான இடத்தில் சீரான முறையில் பாதையை மாற்றுவதற்கு கப்பல்களுக்கு வழிகாட்டும் போக்குவரத்து வழிகளை (Traffic lanes) அமைப்பது இன்றியமையாததாகும். மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், தொண்டரா முனைக்கு (Dondra Head) அப்பால் அமைந்துள்ள அருகிலுள்ள TSS (Traffic Separation Scheme) இலிருந்து/அதற்கு போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் இந்த போக்குவரத்து வழிகளை அமைப்பதாகும். காலிப் பகுதியைக் கடந்து ஏராளமான பெரிய எண்ணெய் விநியோகக் கப்பல்கள் (Oil tankers) பயணிப்பதாலும், அத்தகைய கப்பல் ஒன்றில் ஏற்படும் விபத்து இலங்கைக்கு பெரும் பொருளாதாரப் பேரழிவை ஏற்படுத்தும் என்பதாலும், கடல்சார் போக்குவரத்தின் பாதுகாப்பு, செயல்திறனை அதிகரிப்பதற்கும் கடல் சூழலைப் பாதுகாப்பதற்கும் கப்பல் முகாமைத்துவ அமைப்பை (VMS) நிறுவுவது அவசியமாகும்.

இந்தக் கொள்கை நோக்கங்கள் மூலம் கடல்சார் துறையில் இலங்கையின் மூலோபாய திசைப்படுத்தலை வழிநடத்துவதுடன், நிலையான வளர்ச்சி மற்றும் சுபீட்சத்திற்காக கடல்சார் துறையின் முழுத் திறனையும் பயன்படுத்துவதற்கு எடுக்கப்படும் கொள்கை முன்னுரிமைகள், நடவடிக்கைகள் மற்றும் தலையீடுகள் குறித்து தெளிவுபடுத்துகின்றன. இந்த நோக்கங்களை நோக்கிச் செயல்படுவதன் மூலம், உலகளாவிய மட்டத்தில் ஒரு ஆற்றல்மிக்க மற்றும் போட்டித்தன்மைமிக்க கடல்சார் நாடாக நிலைநிறுத்துவதற்கு இலங்கை எதிர்பார்க்கின்றது.

## 7. ஏற்புடைமை மற்றும் விடயவெல்லை (Applicability & Scope)

இலங்கையின் கடல்சார் போக்குவரத்து கொள்கையானது, கடல்சார் துறையின் பல்வேறு பரிமாணங்களில் விரிவாக நடைமுறைப்படுத்தப்படக் கூடியதாகவும் பயன்படுத்தப்படக் கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நிலையான அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்தை அடைந்து கொள்வதற்காக இக் கொள்கையின் செயற்திறனை உறுதிப்படுத்தும் வகையில், அதன் விடயவெல்லைக்கு பரந்த அளவிலான பங்குதாரர்கள், செயற்பாடுகள் மற்றும் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டிய துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் கடல்சார் போக்குவரத்து கொள்கையின் ஏற்புடமை மற்றும் விடயவெல்லை பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது

I. **புவியியல் ரீதியான பரப்பு (Geographical Coverage):** இக்கொள்கையானது இலங்கையின் பிராந்திய கடல் எல்லை (Territorial waters), துறைமுகங்கள், கடலோரப் பகுதிகள் மற்றும் கடல்சார் வலயங்களுக்குள் இடம்பெறும் அனைத்து கடல்சார் செயற்பாடுகளுக்கும் பொருந்தும். பிரதான சர்வதேச கப்பல் போக்குவரத்துப் வழிகளை அண்மித்து இலங்கை அமைந்துள்ள மூலோபாய இருப்பிடமும் இங்கு கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்தியப் பெருக்கடல் பிராந்தியத்தில் ஒரு கடல்சார் மையமாக நாட்டின் பங்களிப்பும் இங்கு வலியுறுத்தப்படுகிறது.

II. **பங்குதாரர்களின் பங்களிப்பு(Stakeholder Engagement):** அரசாங்க நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், சிவில் அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச பங்காளிகள் உள்ளிட்ட பரந்த அளவிலான பங்குதாரர்களை இணைத்துக்கொள்வதற்கு இக்கொள்கை எதிர்பார்க்கிறது. கொள்கையை தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்யும் செயல்முறைகளுக்காக பங்குதாரர்களுடனான தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும்.

III. **துறைசார்ந்த பரப்பு (Sectoral Coverage):** இலங்கையின் கடல்சார் போக்குவரத்து கொள்கையானது கடல்சார் துறைக்கு சொந்தமான துறைமுக அபிவிருத்தி, கப்பற் சேவைகள், கடல்சார் வர்த்தகம், விநியோகச் சங்கிலி, மீன்பிடித் தொழில், சுற்றுலாத்துறை, கடல்சார் பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தலின்மை போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்குகிறது. இத்துறைகளுக்கிடையில் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக இதுவொரு முழுமையான (Holistic) அணுகுமுறையைப் பின்பற்றுகிறது.

IV. **கொள்கை கருவிகள் (Policy Instruments):** தமது நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இக்கொள்கையானது ஒழுங்குமுறை, நிறுவன ரீதியான, நிதி மற்றும் திறன் மேம்பாட்டுக் கருவிகளின் கலவையைப் பயன்படுத்துகிறது. குறிப்பிட்ட தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுக்குப் பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்ட சட்டவாக்கம், ஒழுங்குவிதிகள், கொள்கைகள், வழிகாட்டுதல்கள், ஊக்குவிப்புகள், முதலீடுகள், கூட்டாண்மைகள் மற்றும் திறன் மேம்பாட்டு முன்முயற்சிகள் இதில் உள்ளடக்கப்படலாம்.

V. **காலவரையறை ரீதியான பரிமாணம் (Temporal Dimension):** நெருக்கடியான சவால்களுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான உடனடி நடவடிக்கைகளின் அவசியத்தை இக்கொள்கை அங்கீகரிப்பதுடன், காலப்போக்கில் நிலையான வளர்ச்சிக்கான அடித்தளத்தை இடவேண்டியதன் தேவையையும் ஏற்றுக்கொண்டு இந்தக்கொள்கை குறுகியகால மற்றும் நீண்டகால நோக்கங்கள் இரண்டையும் கருத்திற்கொள்கிறது. மாறிவரும் சூழ்நிலைகள் மற்றும் வளர்ந்து வரும் முன்னுரிமைகளுக்கு ஏற்ப காலமுறை வாரியான மீளாய்வுகள், கண்காணிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பொறுமுறைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

VI. **சர்வதேச பரிமாணம் International Dimension):** அடிப்படையில் உள்நாட்டு முன்னுரிமைகள் மீது கவனம் செலுத்திய போதிலும், இலங்கையின் கடல்சார் போக்குவரத்துப் கொள்கையானது சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும், உலகளாவிய கடல்சார் நெறிமுறைகள், தரநிலைகள் மற்றும் முன்முயற்சிகளுடன் இணங்கிப் போவதன் அவசியத்தையும் அங்கீகரிக்கிறது. கடல்சார் தொடர்புத் திறன் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக சர்வதேச கூட்டாண்மைகள், உடன்படிக்கைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்துவதற்கு இது முயற்சிக்கிறது.

VII. **நிலையான தன்மை மற்றும் மீளெழுச்சித் திறன் (Sustainability and Resilience):** நிலையான தன்மை மற்றும் மீளெழுச்சித் திறன் என்பன இக்கொள்கையின் பொருந்தும்தன்மை மற்றும் விடயவெல்லை நெடுகிலும் காணப்படும் முக்கிய கருப்பொருள்களாகும். கடல்சார் செயற்பாடுகள் சமூக நல்வாழ்விற்கும் எதிர்கால சந்ததியினரின் சுபீட்சத்திற்கும் சாதகமான பங்களிப்பை வழங்குவதை உறுதி செய்வதற்காக, நிலையான அபிவிருத்தி கோட்பாடுகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மீளெழுச்சித் திறன் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய (Inclusive) வளர்ச்சி ஆகியவற்றை இது வலியுறுத்துகிறது.

சுருக்கமாகக் கூறின், இலங்கையின் கடல்சார் போக்குவரத்து கொள்கையானது கடல்சார் துறையினுள் பரந்த அளவிலான பங்குதாரர்கள், துறைகள் மற்றும் சவால்களுக்கு தீர்வுகாண்பதன் மூலம் அதன் எல்லைக்குள் மிகவும் நடைமுறைச் சாத்தியமானதாகவும் விரிவானதாகவும் காணப்படுகிறது. ஒரு முழுமையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலம், இலங்கையின் கடல்சார் துறையின் நன்மைகளை அனைத்து பங்குதாரர்களுக்கும் அதிகபட்சமாக சென்றடையச்

செய்வதற்காக நிலையான அபிவிருத்தியை ஊக்குவித்தல், தொடர்பு திறன்களை மேம்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தலின்மையை உறுதிப்படுத்தல், சர்வதேச ஒத்துழைப்பை விருத்தி செய்தல் ஆகியவற்றை இக்கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 8. கொள்கை அமுலாக்கம் (Policy Implementation)

இலங்கையின் கடல்சார் போக்குவரத்து கொள்கையை நடைமுறைப்படுத்துவதென்பது, கொள்கைசார் நோக்கங்களை உறுதியான நடவடிக்கைகள் மற்றும் முடிவுகளாக மாற்றுவதற்கான ஒரு முறையான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையாகும். கொள்கை முன்முயற்சிகளை திறம்பட நடைமுறைப்படுத்துவதையும் கண்காணிப்பதையும் உறுதி செய்வதற்காக இச்செயற்பாடு பல்வேறு கட்டங்கள், வழிமுறைகள் மற்றும் பங்குதாரர்களைக் கொண்டுள்ளது. இலங்கை கடல்சார் சூழலில் கொள்கை அமுலாக்கத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

I. **மூலோபாய திட்டமிடல் (Strategic Planning):** கடல்சார் போக்குவரத்து கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான நோக்கங்கள் மற்றும் முன்னுரிமைகளுடன் இணங்கிப்போகும் விரிவான செயற் திட்டங்கள் மற்றும் மூலோபாயங்களை தயாரிப்பதன் மூலம் அமுலாக்கச் செயல்முறை தொடங்குகிறது. இத்திட்டங்கள் அமுலாக்கத்தில் ஈடுபட்டுள்ள பல்வேறு பங்குதாரர்களுக்கான குறிப்பிட்ட நோக்கங்கள், இலக்குகள், காலக்கெடு, வள ஒதுக்கீடுகள் மற்றும் பொறுப்புகளைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

II. **நிறுவன ரீதியான சட்டகம் (Institutional Framework):** கொள்கையை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கு வலுவான நிறுவன ரீதியான கட்டமைப்பை நிறுவுவது இன்றியமையாததாகும். இதில் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள், ஒழுங்குமுறை அமைப்புகள், தொழில்துறை சங்கங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கு இடையே தடையற்ற ஒத்துழைப்பு மற்றும் தீர்மானம் எடுத்தலை இலகுபடுத்துவதற்காக வகிபாகங்கள், பொறுப்புகள் மற்றும் ஒருங்கிணைப்பு பொறுமுறைகள் வரையறுப்பது உள்ளடக்கப்படுகிறது.

III. **திறன் மேம்பாடு (Capacity Building):** கொள்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவன மற்றும் மனித திறன்களை மேம்படுத்துவது

மிகவும் முக்கியமானதாகும். பங்குதாரர்கள் தங்களது வகிப்பாகங்களை திறம்பட ஆற்றுவதற்குத் தேவையான திறன்கள், அறிவு மற்றும் வளங்களை வழங்குவதற்கான பயிற்சித் திட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள், தொழில்நுட்ப உதவி மற்றும் அறிவுப் பகிர்வு தளங்கள் போன்றன திறன் மேம்பாட்டு முன்முயற்சிகளில் உள்ளடக்கப்படலாம்.

IV. **சட்டவாக்க மற்றும் ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் (Legislative and Regulatory Reforms):** சட்டக் கட்டமைப்புகளை கொள்கைசார் நோக்கங்களுடன் சீரமைப்பதற்கும், குறைப்பாடுகளை தவிர்த்துக்கொள்வதற்கும், நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கும் மற்றும் சர்வதேச தரநிலைகள், சிறந்த நடைமுறைகளுடனான இணக்கப்பாட்டை உறுதி செய்வதற்கும் சட்டவாக்க மற்றும் ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் தேவைப்படலாம். தேவையின் அடிப்படையில் புதிய சட்டங்களை வரைதல், நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளை திருத்துதல் அல்லது வழிகாட்டல்கள் மற்றும் தரநிலைகளைத் தயாரித்தல் இதில் உள்ளடக்கப்படும்.

V. **முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு அபிவிருத்தி (Investment and Infrastructure Development):** கடல்சார் போக்குவரத்து கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு துறைமுக மேம்பாடுகள், போக்குவரத்து வலையமைப்புகள், கடல்சார் வசதிகள் மற்றும் அதுசார்ந்த உள்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி வளங்கள் மற்றும் முதலீடுகளைத் திரட்டுவது அவசியமாகிறது. பெரிய அளவிலான திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக அரச-தனியார் பங்களிப்புகள் (PPPs) மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை (FDI) பயன்படுத்திக்கொள்ள முடியும்.

VI. **கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (Monitoring and Evaluation):** முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும், கொள்கைசார் தலையீடுகளின் செயற்திறனை மதிப்பிடுவதற்கும், நிலவும் தடைகள் அல்லது சவால்களைக் கண்டறிவதற்கும் மற்றும் அமுலாக்க மூலோபாயங்களுக்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கும் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு இன்றியமையாததாகும். கொள்கைசார் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதில் ஏற்படும் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக முதன்மைச் செயல்திறன் குறிகாட்டிகளும் (KPIs) அளவுகோல்களும் நிறுவப்படுகின்றன.

VII. **பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் தகவல் தொடர்பு (Stakeholder Engagement and Communication):** ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கும், பின்னூட்டங்களைப் (Feedback) பெற்றுக்கொள்வதற்கும், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கும் மற்றும் கொள்கை அமுலாக்க முயற்சிகளைச் சுற்றி பொதுவான உடன்பாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கும் பங்குதாரர்களை இணைத்துக்கொள்வதும் திறந்த தகவல் தொடர்பு வழிகளைப் பேணுவதும் மிகவும் முக்கியமானதாகும். அனைவரினதும் பங்களிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக வழக்கமான ஆலோசனைகள், பங்குதாரர்களின் கூட்டங்கள், மன்றங்கள் மற்றும் சமூக தகவல் தொடர்புச் செயற்பாடுகள் நடாத்தப்படுகின்றன.

VIII. **இடர் முகாமைத்துவம் மற்றும் அவசரக்காலத் திட்டமிடல் (Risk Management and Contingency Planning):** சவால்களை முன்கூட்டியே கண்டறிவதும் இடர்களைக் குறைப்பதும் வெற்றிகரமான கொள்கை அமுலாக்கத்தின் இன்றியமையாத பகுதியாகும். வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடுகள், தொழில்நுட்பப் பிரச்சினைகள், அரசியல் காரணிகள் அல்லது வெளிப்புறக் செல்வாக்குகள் போன்ற சாத்தியமான சவால்களைக் கண்டறிவதற்காக இடர் முகாமைத்துவ உத்திகள் தயாரிக்கப்படுவதுடன், எதிர்கொள்ளக்கூடிய சவால்களுக்குத் தீவிரமாக முகங்கொடுப்பதற்காக அவசரக்காலத் திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன.

IX. **தழுவல் திறன் முகாமைத்துவம் (Adaptive Management):** மாறிவரும் சூழ்நிலைகள், பின்னூட்டங்கள் மற்றும் பெறப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் மீண்டும் மீண்டும் திருத்தங்களைச் செய்யக்கூடிய வகையில் அமுலாக்கத் திட்டங்கள் நெகிழ்வுத்தன்மை மிக்கதாகவும் மாற்றியமைத்துக் கொள்ளக்கூடியதாகவும் காணப்படுகின்றன. கொள்கை அமுலாக்கமானது காலப்போக்கில் பதிலளிக்கக்கூடியதாகவும் திறம்படவும் இருப்பதை உறுதி செய்வதற்காக, வளர்ந்து வரும் போக்குகள், சிறந்த நடைமுறைகள் மற்றும் மேம்படுத்தப்பட வேண்டிய துறைகளைக் கண்டறிவதற்கு வழக்கமான மீளாய்வுகளும் மதிப்பீடுகளும் நடாத்தப்படுகின்றன.

முறையான மற்றும் முழுமையான அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலம், இலங்கை தனது கடல்சார் போக்குவரத்துக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும், நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், போட்டித்திறனை

மேம்படுத்துவதற்கும், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நல்வாழ்வுக்காக கடல்சார் துறையின் நன்மைகளை அதிகபட்சமாகப் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்க்கின்றது.

### I. மூலோபாயங்கள்(Strategies)

இலங்கையின் கடல்சார் போக்குவரத்துக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான மூலோபாயங்கள், அதன் நோக்கங்களைத் திறம்பட அடைந்துகொள்வதை நோக்கமாகக் கொண்ட பல அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன. இந்த மூலோபாயங்கள் குறிப்பிட்ட சவால்களுக்குத் தீர்வுகாண்பதற்கும், வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் இலங்கையின் கடல்சார் பலத்தைப் பிரயோகிப்பதற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. கடல்சார் போக்குவரத்துக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கியமான மூலோபாயங்கள் பின்வருமாறு ஆகும்:

i. **உள்கட்டமைப்பு அபிவிருத்தி (Infrastructure Development):** கொள்ளளவு, வினைத்திறன் மற்றும் இணைப்புத்திறன் (Connectivity) ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக துறைமுக உள்கட்டமைப்பு, போக்குவரத்து வலையமைப்புகள் மற்றும் அதுசார்ந்த வசதிகளுக்கான முதலீடுகளுக்கு முன்னுரிமை அளித்தல். பெரிய கப்பல்களுக்கு வசதியளித்தல், சரக்குக் கையாளுதல் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் தடையற்ற பன்முறைமைப் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நவீனமயமாக்குதல்.

ii. **வணிகம் செய்வதை இலகுபடுத்துவதற்கான சுட்டெண் (Ease of Doing Business Index):**

- ஆவணப்பணிகள் மற்றும் செயலாக்க நேரத்தைக் குறைப்பதற்காக சுங்க நடைமுறைகள், துறைமுக நுழைவு மற்றும் விடுவிப்பு (Clearance) செயல்முறைகளை நெறிப்படுத்துதல்.
- தாமதங்களைக் குறைப்பதற்காக அனைத்து ஒழுங்குமுறை அனுமதிகளுக்கும் மின்னணு ஆவணமாக்கல் (Electronic documentation) மற்றும் டிஜிட்டல் தளங்களை நடைமுறைப்படுத்துதல்.
- பிராந்திய மற்றும் உலகளாவிய துறைமுகங்களுடன் போட்டியிடக்கூடிய வகையில் துறைமுகக் கட்டணங்கள், சுங்கத்தீர்வைகள் மற்றும் ஏனைய கட்டணங்களை மீளாய்வு செய்து நியாயப்படுத்துதல்.

- வணிகங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு கடல்சார் செயல்பாடுகள் தொடர்பான அனைத்து செலவுகள் பற்றிய தெளிவான மற்றும் வெளிப்படையான தகவல்களை வழங்குதல்.

இலங்கையின் கடல்சார் தொழில்துறையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மற்றும் இடத்திலும் கவர்ச்சிகரமான நிதிசார் கொள்கை நடவடிக்கைகள் உட்பட சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

iii. **பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தலின்மையை அதிகரித்தல் (Safety and Security Enhancement):** கடல்சார் செயல்பாடுகளின் பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தலின்மையை (Security) உறுதி செய்வதற்காக கடல்சார் பாதுகாப்புத் திறன்கள், கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல். கடற்கொள்ளை, கடல்சார் பயங்கரவாதம் மற்றும் கடல்சார் குற்றங்களை திறம்பட எதிர்கொள்வதற்காக சர்வதேச பங்காளிகள், அண்டை நாடுகள் மற்றும் தொடர்புடைய அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்.

iv. **சுற்றுச்சூழல் நிலையான தன்மை (Environmental Sustainability):** நிலையான கப்பல் போக்குவரத்து நடைமுறைகளை ஊக்குவித்தல், கப்பல்களிலிருந்து வெளியாகும் உமிழ்வைக் (Emissions) குறைத்தல் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுபாட்டைக் குறைத்தல். கடல்சார் துறையில் பசுமைத் தொழில்நுட்பங்கள், ஆற்றல் திறன்மிக்க நடைமுறைகள் மற்றும் மாசுபாட்டைத் தடுக்கும் நடவடிக்கைகளைப் பின்பற்றுவதை ஊக்குவிப்பதற்குக் கட்டுப்பாடுகள், ஊக்கத்தொகைகள் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

v. **மனிதவள மேம்பாடு (Human Resource Development):** கடல்சார் தொழில்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய திறமையான உழைப்பாளர் படையை உருவாக்குவதற்காக கல்வி, பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடு செய்தல். கடல்சார் துறை சார்ந்த பாடத்திட்டங்கள், சான்றிதழ்கள் மற்றும் தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகளைத் தயாரிப்பதற்காக கல்வி நிறுவனங்கள், பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்துறை சங்கங்களுடன் இணைந்து செயல்படுதல்.

vi. **சர்வதேச ஒத்துழைப்பு (International Collaboration):** கடல்சார் தொடர்புத் திறனை மேம்படுத்தவும், தகவல் பகிர்வை ஊக்குவிக்கவும் மற்றும் பொதுவான சவால்களை

எதிர்கொள்ளவும் அண்டை நாடுகள், பிராந்திய அமைப்புகள் மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடனான கூட்டாண்மைகளை வலுப்படுத்துதல். கடல்சார் துறையில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக சர்வதேச மன்றங்கள், கூட்டு முன்முயற்சிகள் மற்றும் கூட்டுறவு ஒப்பந்தங்களில் பங்களித்தல்.

vii. **ஒழுங்குமுறை சீர்திருத்தம் மற்றும் நல்லாட்சி (Regulatory Reform and Governance):** சர்வதேச தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இணங்குவதை உறுதி செய்வதற்காக, நடைமுறையிலுள்ள கடல்சார் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நிர்வாக நடைமுறைகளை மீளாய்வு செய்து தற்போதைய நிலைக்கு புதுப்பித்தல். கடல்சார் பங்குதாரர்களுக்கு சாதகமான வணிகச் சூழலை உருவாக்குவதற்காக ஒழுங்குமுறை செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல்.

viii. **கடல்சார் சுற்றுலாத் துறையை ஊக்குவித்தல் (Promotion of Maritime Tourism):** கடலோரப் பகுதிகள், துறைமுகங்கள் மற்றும் கடல்சார் பாரம்பரிய இடங்களின் சுற்றுலாச் சேவைகளைப் பன்முகப்படுத்துதல், உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் பார்வையாளர்களின் அனுபவங்களை உயர்த்துவதன் மூலம் இலங்கையின் கடல்சார் சுற்றுலாத் திறனை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஊக்குவித்தல். நிலையான சுற்றுலா நடைமுறைகளை உறுதி செய்வதற்காக சுற்றுலாத் தொழில் துறை, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்.

ix. **ஆராய்ச்சிகள மற்றும் புத்தாக்கங்கள் (Research and Innovation):** உற்பத்தித்திறன், போட்டித்திறன் மற்றும் நிலையான தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக கடல்சார் துறையில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதை ஊக்குவித்தல். எரிபொருள் வினைத்திறன், கழிவு முகாமை மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற கடல்சார் சவால்களுக்கு நவீன தீர்வுகளை உருவாக்குவதற்காக ஆராய்ச்சி நிறுவனங்கள், ஆரம்பக்கட்ட வணிகங்கள் (Startups) மற்றும் தொழில்நுட்ப Incubators க்கு ஆதரவளித்தல்.

இந்த மூலோபாயங்களை திறம்பட நடைமுறைப்படுத்துவதன் மூலம், இலங்கை தனது கடல்சார் போக்குவரத்துக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும், ஒரு கடல்சார் நாடாக தனது நிலையை வலுப்படுத்துவதற்கும், நிலையான அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்திற்காக கடல்சார்

துறையின் சமூக-பொருளாதார நன்மைகளை அதிகபட்சமாகப் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்க்கிறது.

## II. பொறுப்பும் அதிகாரமும் (Responsibility & Authority)

கடல்சார் போக்குவரத்துக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் சூழலில், பொறுப்பும் அதிகாரமும் என்பது, கொள்கை முன்முயற்சிகளைச் செயல்படுத்துதல், ஒழுங்குமுறை இணக்கப்பாட்டைக் கண்காணித்தல் மற்றும் கொள்கைசார் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இதில் ஈடுபட்டுள்ள பல்வேறு பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களாகும். முக்கிய பங்குதாரர்களிடையே பொறுப்புகளும் அதிகாரங்களும் பகிரப்படும் விதம் பற்றிய ஒரு மேலோட்டம் பின்வருமாறு ஆகும்.

i. **அரச நிறுவனங்கள் (Government Agencies):** அரச நிறுவனங்கள் பொதுவாக கடல்சார் கொள்கைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் அமுலாக்கம் செய்தல் ஆகியவற்றிற்கான பொறுப்பைக் கொண்டுள்ளன. கொள்கைசார் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கும், வளங்களை ஒதுக்குவதற்கும் மற்றும் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் அவற்றுக்கு அதிகாரம் உண்டு. குறிப்பிட்ட பொறுப்புகளில் பின்வருவன அடங்கும்:

அ. **துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சு:** ஒட்டுமொத்த கொள்கை வகுத்தல், துறைமுக அபிவிருத்தி மற்றும் கடல்சார் போக்குவரத்து ஆகியவற்றிற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

ஆ. **கடல்சார் நிர்வாகம் (Maritime Administration):** கடல்சார் பாதுகாப்பு, கப்பல்களுக்குள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கப்பல் பதிவு மற்றும் சர்வதேச கடல்சார் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதைக் கண்காணித்தல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

இ. **சுங்கத் திணைக்களம்:** துறைமுகங்கள் மற்றும் கடல்சார் எல்லைகளில் சுங்க நடைமுறைகள், சுங்கத்தீர்வைகளை அமுலாக்கல் மற்றும் வர்த்தக வசதியளிப்பு முகாமைத்துவம் ஆகியவற்றை மேற்கொள்கின்றது.

ஈ. **சுற்றுச்சூழல் நிறுவனங்கள்:** கடல்சார் துறையில் சுற்றுச்சூழல் தரநிலைகள் மற்றும் மாசுபாடுகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அமுலாக்கம் செய்தல் ஆகியவற்றை மேற்கொள்கின்றன.

உ. **கடல்சார் பாதுகாப்பு மற்றும் அச்சறுத்தலின்மை:** கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்தல், கடற்கொள்ளை, பயங்கரவாதம் மற்றும் கடல்சார் குற்றங்களை ஒடுக்குதல் மற்றும் தேசிய தேவைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை மேற்கொள்கின்றன.

ii. **ஒழுங்குமுறை அமைப்புகள் (Regulatory Bodies):**

ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு கடல்சார் ஒழுங்குவிதிகள், தரநிலைகள் மற்றும் உரிமத் தேவைகளுக்கு இணங்குவதைக் கண்காணிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. கடல்சார் துறையில் பாதுகாப்பு, மற்றும் அச்சறுத்தலின்மையை உறுதி செய்வதற்காக உரிமங்களை வழங்குவதற்கும், பரிசோதனைகளை நடாத்துவதற்கும் ஒழுங்குவிதிகளை அமுலாக்கம் செய்வதற்கும் அவற்றுக்கு அதிகாரம் உண்டு. எடுத்துக்காட்டுகள்:

அ. **துறைமுக அதிகாரசபைகள் (Port Authorities):** பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்து, துறைமுக செயல்பாடுகள், கப்பல் நங்கூரமிடல் இடங்களை ஒதுக்குதல் (Berth allocation) மற்றும் துறைமுக சேவைகளை முகாமை செய்தல் ஆகியவற்றை மேற்கொள்கின்றன.

ஆ. **கடலோரக் காவல்படை (Coast Guard):** இலங்கை கடல்சார் நிர்வாக அமைப்புடன் (MASL) கலந்தாலோசித்து, கடல்சார் தேவைகளைப் பாதுகாத்தல், கடல்சார் ரோந்துப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பிராந்திய கடல் எல்லைக்குள் கடல்சார் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை அமுலாக்கம் செய்தல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

இ. **கடல்சார் பொலிஸ்:** சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுதல், கடல்சார் குற்றங்களைத் தடுத்தல் அத்துடன் கடலோரப் பகுதிகள் மற்றும் கடல்சார் வலயங்களில் அவசர காலங்களுக்குப் பதிலளித்தல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

iii. **தொழில்துறை சங்கங்கள் (Industry Associations):** தொழில்துறை சங்கங்கள் மூலமாக, கப்பல் நிறுவனங்கள், துறைமுக இயக்குநர்கள், விநியோகச் சங்கிலி சேவை வழங்குநர்கள் (Logistics providers) மற்றும் கடல்சார் சேவை வழங்குநர்கள்

உள்ளிட்ட கடல்சார் பங்குதாரர்களின் தேவைகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன. அவற்றுக்கு நேரடி ஒழுங்குமுறை அதிகாரம் இல்லை என்ற போதிலும், கொள்கை சீர்திருத்தங்களுக்காக தோன்றுதல், கொள்கை வகுப்பிற்கு பங்களிப்புகளை வழங்குதல் மற்றும் தொழில்துறை அபிவிருத்தி முன்முயற்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் ஊடாக அமுலாக்க முயற்சிகளுக்கு ஆதரவளித்தல் ஆகியவற்றை மேற்கொள்கின்றன.

iv. **சிவில் சமூக அமைப்புகள் (Civil Society Organizations - CSOs):** அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) மற்றும் சமூகக் குழுக்கள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புகள், கடல்சார் துறையில் நிலையான அபிவிருத்தி நடைமுறைகளைக் கண்காணித்தல், அதற்காக தோன்றுதல் மற்றும் ஆதரவளித்தல் ஆகியவற்றில் முக்கிய பங்காற்றுகின்றன. அவை விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பொது ஆதரவைத் திரட்டுதல் மற்றும் பங்குதாரர்கள் தங்களது செயல்பாடுகளுக்கு பொறுப்புக்கூறுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை ஆலோசனை, ஆராய்ச்சி மற்றும் சமூக பங்களிப்பு ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்கின்றன.

v. **சர்வதேச பங்காளிகள் (International Partners):** இருதரப்பு மற்றும் பலதரப்பு அமைப்புகள், வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட சர்வதேச பங்காளிகள், கொள்கை அமுலாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்காக தொழில்நுட்ப உதவி, நிதி உதவி மற்றும் நிபுணத்துவ அறிவை வழங்குகின்றனர். அவர்களுக்கு நேரடி ஒழுங்குமுறை அதிகாரம் இல்லை என்ற போதிலும், பொதுவான கடல்சார் சவால்களை எதிர்கொள்ளுதல், சிறந்த நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் திறன் மேம்பாட்டு முன்முயற்சிகளை இலகுபடுத்துதல் ஆகியவற்றிற்காக இலங்கையுடன் இணைந்து செயல்படுகின்றனர்.

vi. **உள்ளூராட்சி மன்றங்கள் / உள்ளூர் அதிகாரசபைகள் (Local Authorities):** மாகாண சபைகள், மாநகர சபைகள்/நகர சபைகள்/பிரதேச சபைகள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் உள்ளிட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகள், அடிமட்ட அளவில் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் தீர்க்கமான பங்காற்றுகின்றன. அவை தேசிய கொள்கைகள் மற்றும் நோக்கங்களுடன் இணங்கிப் போகும் வகையில்,

கடலோரப் பகுதிகள், துறைமுகங்கள் மற்றும் கடல்சார் மரபுரிமைகளுடன் கூடிய இடங்களின் உள்கட்டமைப்பு அபிவிருத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக பங்களிப்பு முன்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்றன.

இந்தப் பங்குதாரர்களுக்கிடையில் பொறுப்புகளும் அதிகாரங்களும் தெளிவாகப் பிரித்துக் காட்டப்படுவதன் மூலம், இலங்கை தனது கடல்சார் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் திறம்பட்ட ஆளுகை, ஒழுங்குமுறை இணக்கப்பாடு மற்றும் ஒருங்கிணைப்பை உறுதி செய்ய எதிர்பார்க்கிறது, இதன் மூலம் கடல்சார் துறையின் நிலையான அபிவிருத்தி மற்றும் சுபீட்சம் ஏற்படுகின்றது.

### III. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (Monitoring & Evaluation)

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E) என்பது முன்னேற்றத்தை மதிப்பிடுதல், சவால்களைக் கண்டறிதல் மற்றும் கொள்கைசார் தலையீடுகளின் செயற்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட, இலங்கையின் கடல்சார் போக்குவரத்துக் கொள்கை அமுலாக்கக் கட்டமைப்பின் இன்றியமையாத அம்சங்களாகும். கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயல்முறையானது கொள்கைசார் நோக்கங்களுடன் ஒப்பிடுகையில் செயல்திறனைக் கண்காணிப்பதற்கும், தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கும் முறையான தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் பின்னூட்டல் வழிமுறைகளை உள்ளடக்கியுள்ளது. இலங்கை கடல்சார் போக்குவரத்துக் கொள்கையின் சூழலில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டின் முக்கிய கூறுகள் பின்வருமாறு ஆகும்.

i. **செயல்திறன் குறிகாட்டிகளை நிறுவுதல் (Establishment of Performance Indicators):** கொள்கைசார் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதில் ஏற்படும் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக முதன்மைச் செயல்திறன் குறிகாட்டிகளையும் (KPIs) அளவுகோல்களையும் வரையறுத்தல். கொள்கை முடிவுகள் பற்றிய அர்த்தமுள்ள மதிப்பீட்டை எளிதாக்குவதற்கு இக்குறிகாட்டிகள் குறிப்பிட்ட (Specific), அளவிடக்கூடிய (Measurable), அடையக்கூடிய (Achievable), பொருத்தமான (Relevant) மற்றும் காலவரையறைக்குட்பட்ட (Time-bound) அதாவது SMART குறிகாட்டிகளாக இருக்க வேண்டும்.

ii. **தரவு சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல் (Data Collection and Reporting):** துறைமுக செயல்பாடுகள், கப்பல் சேவைகள், வர்த்தக அளவுகள், பாதுகாப்புச் சம்பவங்கள், சுற்றுச்சூழல் குறிகாட்டிகள் மற்றும் பொருளாதாரச் செயல்திறன் உள்ளிட்ட கடல்சார் துறையின் பல்வேறு அம்சங்கள் குறித்து தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களைச் சேகரிப்பதற்கான வழிமுறைகளை அமைத்தல். தரவுகளின் சீரான தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக அறிக்கையிடல் தேவைகளையும் வடிவங்களையும் நிறுவுதல்.

iii. **வழக்கமான கண்காணிப்புச் செயல்பாடுகள் (Regular Monitoring Activities):** முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும், போக்குகளைக் கண்டறிவதற்கும் மற்றும் கடல்சார் துறையில் வளர்ந்து வரும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கும் வழக்கமான கண்காணிப்புச் செயல்பாடுகளை நடாத்துதல். கொள்கை முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதையும், களத்தில் அவற்றின் தாக்கத்தையும் மதிப்பிடுவதற்காக காலமுறை மீளாய்வுகள், செயல்திறன் மதிப்பீடுகள், கள விஜயங்கள், பங்குதாரர்களின் ஆலோசனைகள் மற்றும் தரவு பகுப்பாய்வுகள் இதில் உள்ளடக்கப்படலாம்.

iv. **கொள்கைசார் தலையீடுகளை மதிப்பிடுதல் (Evaluation of Policy Interventions):** குறிப்பிட்ட கொள்கைசார் தலையீடுகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் மூலமாக அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதிலுள்ள செயற்திறனை மதிப்பிடுதல். கொள்கைசார் செயல்பாடுகளின் விளைவுகள், வெளியீடுகள் மற்றும் தாக்கங்களை மதிப்பிடுவதற்காக ஆய்வுகள், நேர்காணல்கள், சம்பவக் கற்கைகள் (Case studies), செலவு-பயன் பகுப்பாய்வு மற்றும் தாக்க மதிப்பீடுகள் போன்ற பண்புசார் மற்றும் அளவுசார் மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்துதல்.

v. **பின்னூட்டம் மற்றும் கற்றல் பொறிமுறைகள் (Feedback and Learning Mechanisms):** தொடர்ச்சியான மேம்பாடுகளுக்காகப் பெறப்பட்ட அனுபவங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் பங்குதாரர்களின் பின்னூட்டங்களை உள்வாங்கிக்கொள்வதற்காக பின்னூட்டம் மற்றும் கற்றல் பொறிமுறைகளை நிறுவுதல். கொள்கை அமுலாக்கத்தில் கற்றல் மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக பங்குதாரர்களின் பங்களிப்பு, அறிவுப் பகிர்வு மற்றும் பங்கேற்பு அணுகுமுறைகளை ஊக்குவித்தல்.

vi. **தழுவல் திறன் முகாமைத்துவம் மற்றும் செவ்வையாக்கல் படிமுறைகள் (Adaptive Management and Course Correction):** தீர்மானங்களை எடுப்பதற்கும் தேவைக்கேற்ப

கொள்கைசார் தலையீடுகளைத் தழுவும் திறன், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துதல். அமுலாக்கத்தின் போது காணப்படும் தடைகள், கட்டுப்பாடுகள் மற்றும் குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றுக்குத் தீவிரமாகத் தீர்வுகாண்பதற்காக செவ்வையாக்கும் நடவடிக்கைகள் மற்றும் செயல் திட்டங்களைத் தயாரித்தல்.

vii. **வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் (Transparency and Accountability):** கண்டுபிடிப்புகள், அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகளைத் தொடர்புடைய பங்குதாரர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பொதுமக்களுடன் பகிர்ந்துகொள்வதன் மூலம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயல்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்தல். திறந்த உரையாடல்கள், பின்னூட்டல் வழிமுறைகள் மற்றும் கொள்கை அமுலாக்கம் தொடர்பான குறைகள் அல்லது புகார்களைத் முறைப்பாடுகளை வழிமுறைகளை ஊக்குவித்தல்.

viii. **திறன் மேம்பாடு (Capacity Building):** அரச நிறுவனங்கள், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் ஏனைய தொடர்புடைய பங்குதாரர்களிடையே கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்கான நிறுவன மற்றும் மனித திறன்களைக் கட்டியெழுப்புதல். தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் திறன்களை மேம்படுத்துவதற்கும், சான்றுகளின் அடிப்படையிலான தீர்மானம் எடுக்கும் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்கான பயிற்சி, தொழில்நுட்ப உதவி மற்றும் வளங்களை வழங்குதல்.

ix. **கொள்கை மீளாய்வு மற்றும் திட்டமிடலுடன் ஒருங்கிணைத்தல் (Integration with Policy Review and Planning):** கண்டறியப்படும் விடயங்கள் மூலமாக கொள்கை உருவாக்கம், திருத்தம் மற்றும் முன்னுரிமைகளை அமைப்பதற்கான தகவல்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயல்பாடுகளை கொள்கை மீளாய்வு மற்றும் திட்டமிடல் செயல்முறைகளுடன் ஒருங்கிணைத்தல். வளர்ந்து வரும் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் புதிய நோக்கங்களை அமைப்பதற்கும், மூலோபாயங்களை சீர்செய்வதற்கும் வளங்களை மீண்டும் ஒதுக்குவதற்கும் M&E முடிவுகளைப் பயன்படுத்துதல்.

வலுவான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வழிமுறைகளை நிறுவுவதன் மூலம், இலங்கை தனது கடல்சார் போக்குவரத்துப் போலிசியை/கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும், கொள்கைசார் தலையீடுகளின் தாக்கத்தை

அதிகப்படுத்துவதற்கும், கடல்சார் துறையில் நிலையான அபிவிருத்தி முடிவுகளை எய்துவதற்கும் எதிர்பார்க்கிறது.

## 9. கலைச்சொற்கள் (Glossary)

I. **கடல்சார் போக்குவரத்துக் கொள்கை (Maritime Transport Policy):** கடல்சார் வர்த்தகம், போக்குவரத்து, அச்சுறுத்தலின்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட நாட்டின் கடல்சார் விவகாரங்களை ஆளுகை செய்யும் பரந்த கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்களின் தொகுப்பாகும்.

II. **துறைமுக உள்கட்டமைப்பு (Port Infrastructure):** சரக்குகள் மற்றும் பயணிகளை ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் மற்றும் சரக்குகளை களஞ்சியப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் துறைமுகங்களுக்குள் அமைந்துள்ள கப்பல் நங்கூரமிடல் இடங்கள் (Berths), முனையங்கள் (Terminals), களஞ்சியசாலைகள் (Warehouses), பாரந்தூக்கிகள் (Cranes) மற்றும் கப்பல் போக்குவரத்துப் பாதைகள் (Navigation channels) உள்ளிட்ட பௌதீக வசதிகளும் கட்டமைப்புகளுமாகும்.

III. **வர்த்தக வசதியளிப்பு (Trade Facilitation):** வர்த்தகச் செலவுகளைக் குறைப்பதற்கும், வர்த்தக வினைத்திறனை அதிகரிப்பதற்கும் எல்லைகளுக்கு அப்பால் சரக்குகள், சேவைகள் மற்றும் தகவல்களின் ஓட்டத்தை எளிமைப்படுத்துதல், இணக்கப்படுத்துதல் மற்றும் விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள் மற்றும் செயல்முறைகளாகும்.

IV. **கடல்சார் பாதுகாப்பு (Maritime Security):** அவதானிப்புகள், சட்ட அமுலாக்கம் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மூலம் கடற்கொள்ளை, பயங்கரவாதம், கடத்தல் மற்றும் கடல்சார் குற்றங்கள் போன்ற அச்சுறுத்தல்களிலிருந்து கடல்சார் செயல்பாடுகள், சொத்துக்கள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதாகும்.

V. **சுற்றுச்சூழல் நிலைபேறாக்கம் (Environmental Sustainability):** சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல், மாசுபாட்டைக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்ற விளைவுகளைக் குறைத்தல் உள்ளடங்கலாக, எதிர்கால சந்ததியினர் தங்களது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திறனைப் பாதிக்காத வகையில் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் பழக்கமாகும்.

VI. **சர்வதேச ஒத்துழைப்பு (International Collaboration):** கடல்சார் துறையில் பொதுவான சவால்களை எதிர்கொள்ளுதல், வளங்களைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் பரஸ்பர தேவைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றிற்காக நாடுகள், அமைப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கிடையில் காணப்படும் ஒத்துழைப்பும் கூட்டாண்மையுமாகும்.

VII. **ஒழுங்குமுறைச் சட்டகம் (Regulatory Framework):** உரிமங்கள் வழங்குதல், அனுமதிப்பத்திரங்கள், பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகள் மற்றும் சுங்க நடைமுறைகள் உள்ளடங்கலாக, கடல்சார் செயல்பாடுகளை ஆளுகை செய்யும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், கொள்கைகள் மற்றும் தரநிலைகளைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

VIII. **திறன் மேம்பாடு (Capacity Building):** கடல்சார் கொள்கைகளைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கும், கடல்சார் துறையின் சவால்களை எதிர்கொள்வதற்கும் தேவையான அறிவு, திறன்கள், வளங்கள் மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகளாகும்.

IX. **அரச-தனியார் கூட்டாண்மை (Public-Private Partnerships - PPPs):** பொதுவாக இடர்களைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் நீண்டகால ஒப்பந்த உடன்படிக்கைகளை உள்ளடக்கிய, கடல்சார் உள்கட்டமைப்பு சேவைகள் மற்றும் முதலீடுகளை வழங்குவதற்காக அரச துறை நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளும் ஒத்துழைப்பு ஏற்பாடுகளாகும்.

X. **கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (Monitoring and Evaluation - M&E):** கடல்சார் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் மூலமாக அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும், செயல்திறனை மதிப்பிடுவதற்கும் மற்றும் செயற்திறனை அளவிடுவதற்கும் உள்ள முறையான செயல்முறைகளாகும்.

XI. **பங்குதாரர்களின் பங்களிப்பு (Stakeholder Engagement):** அனைவரையும் உள்ளடக்குதல் (Inclusivity), வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக கொள்கை வகுத்தல் செயல்முறையில் அரச நிறுவனங்கள், தொழில்துறை சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களை இணைத்துக்கொள்வதாகும்.

XII. **தழுவல் திறன் முகாமை (Adaptive Management):** மாறிவரும் சூழ்நிலைகள், பின்னூட்டங்கள் மற்றும் மதிப்பீட்டுக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் பொருத்தப்பாடுகள், கற்றல் மற்றும் தழுவல் திறனுக்கு இடமளிக்கும், கொள்கை அமலாக்கத்திற்கான ஒரு நெகிழ்வுத்தன்மைமிக்க மற்றும் மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய (Iterative) அணுகுமுறையாகும்.

XIII. **வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் (Transparency and Accountability):** தீர்மானம் எடுக்கும் செயல்முறைகள், வள ஒதுக்கீடுகள் மற்றும் விளைவுகளில் திறந்ததன்மை, ஒழுங்கமைவு மற்றும் பொறுப்புணர்வை உறுதிசெய்கின்ற, கடல்சார் கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் மீதான பொது நம்பிக்கையையும் பாதுகாப்பையும் விருத்தி செய்கின்ற ஆளுகை கோட்பாடுகளாகும்.

XIV. **நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு (Interagency Coordination):** பொதுவான கடல்சார் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும், பணிகள் ஒன்றின் மேல் ஒன்று அடுக்கப்படுவதைத் (Duplication) தவிர்ப்பதற்கும் அல்லது நலன் சார்ந்த முரண்பாடுகளை (Conflicts of interest) தவிர்ப்பதற்கும் கொள்கைகளை சீரமைத்தல், வளங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக அரச நிறுவனங்களுக்கும் பங்குதாரர்களுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் கூட்டு முயற்சிகளாகும்.